Registered as a NewsPaper
விலை ரூபா : 10.00

இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்- 12



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-13212)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-05 | 20-11-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-276

# யாழ்.மாவட்ட வாக்களிப்பு தவிர்ப்பு; அரசிற்குக் கூறும் அபாயகர செய்தி

## சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க

(கொழும்பு)

*சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பை யாழ். மாவட்டம் முற்றாகத் தவிர்த்து ஒருஅபாயகரமான செய்தியை கொழும்பிற்கு கூறியுள்ளதாக பிரபல சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.*

சிறிலங்கா அரசின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாணம் இருப்பதாகவும் சுமார் 50,000 இற்கும் மேற்பட்ட படைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அங்கு நாளாந்த நிர்வாகம் வழமையாக நடைபெறுவதான ஒரு தோற்றத்தையே அரசும், செய்தி நிறுவனங்களும் இதுவரை எமக்குக் காட்டி வந்தன.

ஆனால் விடுதலைப் புலிகளின் விருப்பிற்கு அமைய இம்மாவட்டம் முற்றாக வாக்களிப்பை தவிர்த்தமையானது அங்குஅரசாங்கமோ அல்லது அரச படைகளோ முற்றாக செயலிழந்து போயுள்ளதையே காட்டுகிறது. யாழ் குடாநாடு கூட விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப் பாட்டின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு; மகிந்தவுடன் விரைவில் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் நேற்று சந்தித்துப் பேசினார்.

புதிய சனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவையும் தொடர்புகொண்டு இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் விரைவில் பேச்சுக்களை நடத்த உள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகிந்தராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான அமைதிப்பேச்சுக்களில் இந்தியா மீண்டும் தலையிடக் கூடும் என்ற நிலையில் இந்தியத் தூதுவரின் தீவிர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியாக பொறுப்பேற்றிருப்பவருக்கு பிரபாகரனின் கனத்த செய்தி காத்திருக்கிறது

### சி.என்.என் ஊடகம் தெரிவிப்பு

இலங்கைத் தீவில் சிறிலங்கா சனாதிபதியாகப் பொறுப்பேற்றிருப்பவருக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் கனத்த செய்தி காத்திருக்கிறது என்று சி. என்.என் ஊடகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சி.என்.என் வெளியிட்டுள்ள கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது,

தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வை மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கிறார். முன்னைய யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்த போது நோர்வேயை அனுசரணையாளராக அழைத்து அமைதிப்பேச்சுக்களை ரணில் விக்கிரமசிங்க தொடங்கினார்.

இருப்பினும் 2003 ஆம் ஆண்டில் அமைதிப் பேச்சுக்களில் இருந்து விடுதலைப் புலிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் எண்ண ஓட்டங்கள் குறித்த எமது அனுபவம் தோல்வியடைந்து விட்டது

### ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடித்து விட்டனர் என்றும் புலிகளின் தலைவரின் எண்ண ஓட்டங்கள் குறித்த தமது அனுபவம் தோல்வியடைந்துவிட்டது என்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ராஜித சேனரத்ன கூறியுள்ளதாவது,

வடக்கு- கிழக்கில் பாரியளவிலான வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் தந்திரோபாயத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு பொதுக்கட்டமைப்பு கைவிடல்

### பதவியேற்ற பின்பு மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத்தீவில் நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும் என்றும் ஆழிப்பேரலை மீளமைப்புக்காக தனது நேரடிக் கண்காணிப்பின் கீழான அமைப்பு உருவாக்கப்படும் என்றும் நேற்று பதவியேற்ற சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் 1.22 மணிக்குப் பதவியேற்றார்.

சிறிலங்காவின் தலைமை நீதிபதி சரத் என் சில்வா முன்னிலையில் சனாதிபதி செயலகத்தில் இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பதவியேற்ற பின் நாட்டு மக்களுக்கு மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்காக எனது அரசாங்கம்; விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும்.

பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு தாங்கள் தயாரென விடுதலைப் புலிகள் அறிவித்ததும் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

சமாதான நடவடிக்கைகளில் பங்கேற்க வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். அத்துடன் யுத்தநிறுத்தத்தை மீளாய்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்தராஜபக்ஷவின் வெற்றியால் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படும்

### வைகோ

(சென்னை)

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளதால் நோர்வேயால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ கருத்துத் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் பேசிபோதே வைகோ இவ்வாறு தெரிவிதார்.பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழருக்கான உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகிறது. அது இன்னமும் நீடிக்கின்றது. தமிழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் வானொலியின் 15 ஆம் ஆண்டு நிறைவு விழா

புலிகளின் குரல் வானொலியின் பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா (வானோசை-15) இன்று இடம் பெறவுள்ளது.புலிகளின் குரல் அமலன் அரங்கில் பிற்பகல் 4.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுகளில் வானோசை-15 கலை இலக்கியப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கலும், "வானலை ஏறிவரும் தமிழரின் வீரக்குரலே வாழி" என்ற சிறப்புக் கவியரங்கமும் இடம்பெறும். (சோ)

## மாவீரர் நாள் நவம்பர் – 27

"புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்தமனவுறுதி எமக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எமக்குப் பக்கபலமாக மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை, நாம் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நின்றன."

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.



## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப்பதிப்புத் துறையல் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடியAdobe Pagemaker வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

### விற்பனைக்குண்டு

உழவுச் சிற்றூர்தி குபாட்டா K700, பெட்டிகலப்பை சகிதமும் (புதியது) ஜன்மார்க் உழவுச் சிற்றூர்திப் பெட்டியுடன் (பழையது) விற்பனைக்குண்டு. தொடர்புக்கு பொ.சண்முகசுந்தரம் 106, கனகபுரம் - கிளி துயிலுமில்ல பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக. (6929)


# அரிசி, நெல் குற்றும் ஆலைகளுக்கு சுகாதார நடைமுறைபேணவலியுறுத்து

அரிசி, நெல்குற்றும் ஆலை உரிமையாளர்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதாரசேவையினர் அறிவித்துள்ளனர்.

நெல்ஊறவைக்கும் தொட்டியினுள் மூன்று நாட்களுக்கு மேல் நீர்தேங்காதவாறு பேணப்பட வேண்டும்.

நெல்ஊறவிடும் தொட்டிகழிவு நீர் திறந்த இடங்கள், திறந்த குழியில் விடாது மூடிய நீர் உறிஞ்சக் கூடிய குழிகளில் விடப்படுதல் வேண்டும். இவ் கழிவுகளில் நுளம்பு, இலையான் பெருகாது அவதானிக்க வேண்டும்.

அரிசி,நெல்குற்றும் ஆலை சுற்றாடலில் நீர்தேங்கி நுளம்பு பெருகக்கூடிய ரின்கள், கோப்பைகள், டயர்கள், பிளாஸ்ரிக்வாளிகள், உடைந்த, உடையாத பாத்திரங்கள், போத்தல்கள் அகற்றப்படவேண்டும்.

உமிக்கழிவுகள், காற்றுடன், வெளியுடன் தொடர்புபடாத வகையில் அகற்றப்பட வேண்டும் நிலையைச்,சூழலில் வைத்து எரிப்பதை தவிர்க்கப்படவேண்டும்.

# சுகாதாரக் கருத்தரங்கு

(பூநகரி)

பூநகரிப்பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி அசிரியர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 25இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வாய்ப்புற்று நோய், பற்சுகாதாரம், தனிநபர் சுகாதாரம் என்பன பற்றி தெளிவான கருத்துக்கள் வழங்கப்பட்டது.

இவ்வாறான கருத்தரங்கு தொடர்ச்சியாக பூநகரிப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது எனத் தமிழீழ சுகாதார சேவை பிரதேசஇணைப்பாளர் தெரிவித்தார்.



நயினாமடு திலீபன் மருத்துவசேவை தொண்டர்களும் நெடுங்கேணி மகாவித்தியாலய நெல்சா அணியினரும் இணைந்து "வருமுன் காப்போம்" நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மழைகால தொற்று நோய் ஏற்படாது தடுப்பதற்கான ஆலோசனைக் கருத்துக்கள் வழங்கப்படுகின்றது.

# திருமலைகடலில் சிறியரக மீனினம் இறப்பு; விஞ்ஞான ரீதியில் ஆய்வு நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுகக் குடாக்கடல் பிரதேசத்தில்பெருமளவு சிறிய ரக மீனினம் இறந்ததற்கான காரணம் பற்றி விரிவானஆய்வு விஞ்ஞான ரீதியில் நடத்தப்படுவதாக தேசிய நீரியியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவன தலைவர் சுலோய் பெர்னாண்டோ வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் எஸ்ரங்கராஜாவுக்கு அறிவித்துள்ளார்.

நச்சுத்தன்மை,வெடிபொருட்கள் மற்றும் உணர்விழக்கச்செய்யும் பொருட்கள் காரணமாகத்தான் மீன்கள் இறந்தனவா என்பதை உறுதி செய்யும் முகமாகவே இவ்வாய்வு நடத்தப்படவிருக்கின்றது என்றும் இதற்காக கடல்நீர், இறந்த மீன்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் நாரா தலைவர் சுலோய் பெர்னாண்டோ தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைத் துறைமுகக் கடலில் சார்டைன் என்ற மீனினம் இறந்தது குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேடு குறித்தும் பிரதமசெயலாளர் கடற்றொழில் மற்றும் நீரியியல்வள அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தார். அதற்குப் பதிலாகவே நாராவின் தலைவரின் கடிதம் அமைகின்றது.

கடல் நீரின் உப்புத்தன்மை திருமலைத்துறைமுகக்குடா கடலில் குறைவடைந்ததால் தான் இம் மீனினம் பெருமளவில் இறக்கக் காரணம் என்று கூறப்பட்டிருப்பினும் மீன்களின் இறப்புக்கான திட்டவட்டமான காரணத்தைக் கண்டு பிடிக்குமுகமாக விஞ்ஞான ரீதியிலான ஆய்வு ஒன்றை நாரா அமைப்பு மேற்கொண்டிருப்பதாகவும் நாரா தலைவர் சுலோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திருகோணமலை வைத்தியசாலையில் வயிற்றோட்டம் காரணமாக பலர் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். இதற்குக் காரணம் அவர்கள் இறந்து அழுகிய இம் மீன்களை உணவாகப்பயன் படுத்தியதால் இருக்கலாம். எனவே திருமலைத்துறைமுகக் கடலில் இறந்தநிலையில் காணப்படும் மீன்களை உணவாகப் பயன்படுத்துவதைப் பொதுமக்கள்தவிர்க்க வேண்டும் என்றும் சுலோய்பெர்ணாண்டோ தனது கடிதத்தில் ஆலோசனை கூறியுள்ளார். (25)

# தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் போட்டித்தேர்வு அடுத்த மாதம்

(நமது நிருபர்)

தரம் 6,7,8 ஆகியவற்றுக்கான தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் போட்டித்தேர்வு அடுத்தமாதம் ஐந்தாம் திகதி இடம்பெறவுள்ளது.

வன்னிப் பெரும் நிலப்பரப்பிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் காலை 9.00 மணிக்கு இத்தேர்வு நடைபெறும்.

நாளை மறுதினம் நடைபெற இருந்த இத்தேர்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழக் கல்விமேம்பாட்டுப்பேரவையின் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# காக்கைதீவு குடியிருப்பு பிரதேசத்தில் பாரிய வாய்க்கால் நிர்மாணிக்கும் பணி

(வலிகாமம்)

வலி-தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காக்கைதீவு குடியிருப்புப் பிரதேசத்தில் பாரிய வாய்க்கால் நிர்மாணிக்கும் பணியொன்று இடம்பெற்று வருவதாக வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்தார்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் பிரிவிலேயே மிகவும் தாழ்ந்த இடமாகக் காணப்படும் காக்கைதீவு குடியிருப்புப் பகுதியில் தேங்கும் மழை வெள்ளத்தைக் கடலுக்குள் வெளியேற்றுவதற்காக இந்த வெள்ள வாய்க்கால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் 35 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் வலி. தென்மேற்குப் பிரதேசசபை இந்த வெள்ள வாய்க்கால் நிர்மாணிக்கும் பணியை மேற்கொண்டு வருவதாக சபைச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

நவாலியில் இருந்து தொடங்கும் சங்கையர் வாய்க்கால், சாவல்கட்டு பகுதியில் தொடங்கும் அந்துக்குழி வாய்க்கால் கிழக்குப் பக்கமாக மாநகர சபை எல்லைப் பகுதிகளில் தொடங்கும்வெள்ளவாய்க்கால் ஆகியவற்றினூடாக மழைகாலங்களில் பெருக்கெடுத்து வரும்வெள்ளம் காக்கைதீவு குடியிருப்புப் பிரதேசத்திற்குள்ளேயே இறுதியாக வந்து தேங்கிநிற்கின்றது.

இதனால் இக்குடியிருப்புப் பகுதி மக்கள் மாரிகாலங்களில் மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். மக்கள் நலனைக் கருத்திற்கொண்டே இந்த வெள்ளை வாய்க்காலை நிர்மாணித்துக்கொடுப்பதல்ல சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது. தற்போது வெள்ள வாய்க்கால் அமைக்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகிறது. (37)

# புலிகளின் குரல் ஒலிபரப்பு நேரநீடிப்பு

புலிகளின் குரலின் ஆண்டு நிறைவு வானோசை பதினைந்து மற்றும் தமிழீழ தேசிய மாவீரர் நாள் ஆகியவற்றுக்கான சிறப்பு ஒலிபரப்பு இன்று முதல் 27 ஆம் திகதி வரை விரிவாக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் 27ஆம் திகதிவரை காலை ஐந்துமணிமுதல் இரவு பத்துமணிவரை புலிகளின் குரல் ஒலிபரப்பு நடைபெறும்.

இன்றுவானோசை 15 சிறப்பு ஒலிபரப்பு நடைபெறும். 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை மாவீரர் நாளுக்கான சிறப்பு ஒலிபரப்பு நடைபெறும் 26ஆம்திகதி தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து ஒலிபரப்பும், 27 ஆம்திகதி மாவீரர் நாள் ஒலிபரப்பும்தமிழீழ வானொலியுடன் இணைந்து நடைபெறும்.

# சூழல் மேம்பாட்டுவாரத்தில் மரக்கன்றுகள் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

தேசிய சூழல் மேம்பாட்டு வாரத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் நேற்று மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையர் யோன் நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தேசிய திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலக பணிப்பாளர் ரஞ்சன், கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன், கரைச்சிப் பிரதேசசபை ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டு பிரதேசசபை வளாகத்தில் வாகை மரக்கன்றுகளை நாட்டி நிகழ்வினை ஆரம்பித் துவைத்தனர்.

அத்துடன் கரைச்சிப்பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் நகர, கிராம ரீதியாக திண்மக் கழிவுகளும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நச்சுத் தன்மை குறித்து ஆராய கடல்நீர் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்.குடாநாட்டில் கடல் நீரில் நச்சுத்தன்மைகொண்ட நொதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுகுறித்து ஆராய கடல்நீரை பரிசோதனை செய்ய கடற்றொழில் நீரியியல் வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதுடன் இந்த நீரின் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (28)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகள்

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை மிகமோசமாக காணப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை வட்டக்கச்சிப்பிரதேசத்தில் முற்றாக செய்கை பண்ணப்படாததால் கால் நடைகளின் பண்ணையாளர்களும், மற்றும் குறுகிய கால் நடை வளர்ப்போரும் கால் நடைகளை இரவிலும், பகலிலும் கட்டுவதில்லை

இதனால் கால்நடைகள் இரவு நேரங்களில் வீதிகளில் தங்குவதனால் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. அத்தோடு தற்போது மழைகாலமாகையால் ஆலயங்களின் வளாகங்களிலும், ஆலயத்திலும் கால்நடைகள் தங்கிநின்று எச்சங்கள் கழிந்து வருகின்றன.

அத்தோடு வட்டக்கச்சிப் பொதுச்சந்தை இராமநாதபுரம் சந்தை ஆகியவற்றிலும் கால் நடைகள் இரவிலும் பகலிலும் வியாபாரிகளுக்கு பெரும் தொல்லை கொடுத்து வருகின்றது. (12)

# சிறந்த பயனாளிகள் சந்திப்பு

துணுக்காய்பிரதேசத்தில் யோருட் நிதியுதவியுடன் 2005 இற்கான சிறந்த பயனாளிகள் சந்திப்பு நிகழ்வு யோகபுரம் மத்தி மூவேந்தர் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு யோகபுரம் மத்திய கிராமஅபிவிருத்திச்சங்கத் தலைவர் த.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைத்தல் நிகொட்திட்டத்தின் நிதியுதவியுடன் பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், முன்பள்ளி கட்டடம் திருத்தம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டது. (24)

# தாக்குதல்கள் நடத்துவது எப்படி தீவிரவாதிகளுக்கு இணையத்தளம் மூலம்பயிற்சி

(ஜகார்த்தா)

**தாக்குதல் நடத்துவது குறித்து தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இணையத்தளம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து புதிய தகவல் வெளியாகியுள்ளது.**

அமெரிக்காவை கடுமையாக எதிர்க்கும் பின்லேடனின் அல்-ஹைய்தா இயக்கம் மத்திய கிழக்கு நாடுகளிலும் இந்தோனேஷியாவிலும் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இந்தோனேஷியாவின் பாலித் தீவிலுள்ள ஒரு உணவு விடுதியில் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்ததில் 20 பேர் பலியானார்கள்.

இந்த நிலையில் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இணையத்தளம் ஒன்று தொடங்கப்பட்டு இருப்பது இப்போது தெரியவந்துள்ளது. அல்ஷார் எல் முசிலிமின் என்ற பெயரில் தொடங்கப்பட்டு உள்ள இந்த இணையத் தளத்தில் இந்தோனேஷியாவில் எந்தெந்த இடங்களில் தாக்குதல் நடத்துவது, தலைநகர் ஜகார்த்தாவுக்கு வரும் வெளிநாட்டினரை எப்படி சுட்டுக்கொல்வது, வெடிகுண்டுகளை எப்படி வீசுவது, தப்பிச் செல்வது எப்படி என்பன போன்ற தகவல்கள் இடம்பெற்று இருக்கின்றன. தாக்குதல் நடத்த வேண்டிய இடங்கள் பற்றிய வரைபடங்களும் அதில் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி பாலித்தீவில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் மூன்று பேரில் ஒருவரான அப்துல் அஜிஸ் என்பவர் இந்த இணையத்தளத்தைத் தொடங்கி இருப்பதாக இந்தோனேஷிய பொலிசார்,தெரிவித்தனர்.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநாட்டினர் வசிக்கும் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது.




தென்கொரியாவின் புசான் நகரில் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு நடக்கிறது. இதில் 21 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து புசான் நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. சரக்குப் பெட்டிகளை ஆர்ப்பாட்டக் காரர்கள் எரிக்கின்றனர்.



பாக்தாத்தில் நேற்றுமுன் தினம் நடந்தகார்க் குண்டு தாக்குதலில் குழந்தையுடன் சிறு காயங்களுக்குள்ளாகி அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பிய பெண், அந்த அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாமல் கண்ணீர் விட்டு அழுகிறார்.

# பங்களாதேஷ் மந்திரி திடீர் ராஜினாமா

(டாக்கா)

பங்களாதேஷ் விமான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறை மந்திரி மொகமத் நஸ்ருதீன் தனது மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். சொந்த வேலை காரணமாக அவர் பதவி விலகியதாக பிரதமர் அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

ஆனால் ஹஜ் பயணிகளுக்கான விமானக் கட்டணத்தை நிர்ணயிப்பது குறித்த கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவர் பதவி விலகியதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

# ஈராக்கில் தென்கொரியா படைக்குறைப்புச் செய்யமுடிவு!

(சியோல்)

ஈராக்கிலுள்ள அமெரிக்கக் கூட்டுப்படையில் தென்கொரியா இராணுவமும் இருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக அதிக வீரர்களை அனுப்பிய நாடு இதுவாகும்.

அடுத்த ஆண்டு (2006) மத்தியில் மூன்றில் ஒரு பகுதி இராணுவத்தை திரும்பப் பெற தென்கொரியா விரும்புகிறது. எனவே தற்போதுள்ள 3,200 வீரர்களில் சுமார் 1,000 வீரர்கள் தென்கொரியா திரும்புவார்கள் என்று தெரிகிறது.



பிடல் கஸ்ரோ இரத்தச்சோகை நோயினால் பீடிக் கப்பட்டிருக்கிறார் என அமெரிக்கப் புலனாய்வுத் துறை தெரிவித்திருந்தது. அதன் பின்னர் கியூபாவின் ஹவானா பல்கலைக்கழக மாணவர் களுடன்பிடல் கஸ்ரோ ஆர்வமுடன் உரை யாடுகிறார். மேற்படி அமெரிக்கப் புலனாய்வுத் துறையினரின் செய்தியை அவர் மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடிபாடுக்குள் சிக்கிய சுரங்கத் தொழிலாளி 11 நாட்களின்பின் உயிருடன் மீட்பு

(பீஜிங்)

சீனாவில் சுரங்கத்துக்குள் சிக்கியிருந்த தொழிலாளி ஒருவர் 11 நாட்களுக்குப் பின் உயிருடன்மீட்கப்பட்டார். அவர் தன்னுடைய சிறுநீரைக் குடித்து உயிர் பிழைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சீனாவில் 'பீஜிங் நியூஸ்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி வருமாறு. சீனாவில் வடக்குப்பகுதியில் உள்ள மாகாணமான ஹெபேயில் கடந்த 6 ஆம் திகதி அடுத்தடுத்து மூன்று சுரங்கங்கள் இடிந்து விழுந்தன.இதில், 33 பேர் பலியாயினர்.மேலும் ஐந்துபேர் காணாமல் போயினர். காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த 16 ஆம் திகதி சுரங்கத்தின் அடியில் இருந்து ஒருவர் சத்தம் போடுவதை மீட்பு குழுவினர் கேட்டனர். 200 மீற்றர் அடியில் இருந்து அவரை மீட்க மீட்புக் குழுவினர் பிளாஸ்டிக் குழாய்ஒன்றை மிக கவனமாக இறக்கினர். இடிபாடுகளுக்கிடையில் இறக்கப்பட்ட இந்தக் குழாயின் மூலம் அவருக்கு உணவும் தண்ணீரும் செலுத்தப்பட்டது.

சுரங்கம் மீண்டும் இடிந்து விழலாம் என்ற காரணத்தால் சுரங்கத்தின் பக்கத்தில் இருந்து ஒரு துளையை போட்டு கவனமாக சுரங்கத்தின் அடியில் சிக்கியிருந்த நபரை பத்திரமாக மீட்டனர்.

சுரங்கத்தின் அடியில் இருந்து மீட்கப்பட்டவரின் பெயர் யுவான் செங்லின் (வயது-26) இவர் சுரங்கம் இடிந்து விழும் போது பாரம் தூக்கும் இயந்திர அறையில் இருந்தார். அதனால் அவருக்கு குடிப்பதற்கு தண்ணீர் கிடைத்தது.அங்கு ஒரு வேளை சாப்பாடு மட்டுமே அவருக்கு கிடைத்தது. இவர் தன்னுடைய சிறுநீரையே குடித்து உயிர் பிழைத்ததாக கூறியுள்ளார். ஒருவேளை சாப்பாடு மற்றும் வேகவைக்கப்பட்ட சில ரொட்டிகளையும் சிறிது தண்ணீரை மட்டுமே குடித்து பதினொரு நாட்கள் அவர் சுரங்கத்திற்கு அடியில் கிடந்து உயிர்வாழ்ந்துள்ளார். கடைசி சில நாட்கள் யுவானுக்கு உணவு கூட கிடைக்கவில்லை இதனால் அவர் பலமுறை தண்ணுடைய சிறுநீரை குடித்து உயிர் வாழ்ந்துள்ளார். சுரங்கத்தின் அடியில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட யுவானின் உடல்நிலை நன்றாகஉள்ளது என்றும்ஆனால் அவரது மனநிலை தெளிவில்லாத நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சுரங்கத்தின் அடியில் சிக்கி காணாமல் போன மற்ற தொழிலாளிகள் அனைவரும் பலியாகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது என அப்பத்திரிகை செய்தி தெரிவித்துள்ளது.

# பறவைக் காய்ச்சலுக்கு புதிய மருந்து ஹங்கேரி மருத்துவர்கள் கண்டுபிடிப்பு

(புடாபெஸ்ட்)

ஆசிய நாடுகளில் பரவி வந்த பறவைச் காய்ச்சல் நோய் இப்போது ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவி வருகிறது. 'எச்5 என்1' என்ற வைரஸ் மூலம் பரவும்இந்த நோய் மனிதர்களையும் தாக்குகிறது.

ஆசியாவில் 64 பேர் இந்த நோய்க்கு பலியாகிவிட்டனர். ஆசிய நாடுகளின் பொருளாதாரத்துக்கும் இது அச்சுறுத்தலாக உள்ளது. இந்நிலையில் ஹங்கேரியைச் சேர்ந்த மருத்துவர்கள் பறவைக் காய்ச்சலுக்குப் புதிய தடுப்பு மருந்து ஒன்றைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என தெரிய வருகிறது- எனினும் அம்மருந்து பற்றி மேலதிக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.



பாகிஷ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஐ. நா. சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் பார்வையிடுகின்றார்.

# செச்சினிய பிரதமர் கார்விபத்தில் காயம்

(மொஸ்கோ)

செச்சினிய பிரதமர் செர்ஜி அப்ராமோல் கார் விபத்து ஒன்றில் பலத்த காயமடைந்துள்ளார். இந்த விபத்துமொஸ்கோ நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது. அவர் தற்போது அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தத் தகவலை மொஸ்கோவிற்கான செச்சினிய தூதர் சியாட்சமி தெரிவித்தார். மேலும் இது பற்றி அவர் கூறுகையில்,இது தற்செயலாக ஏற்பட்ட விபத்து என்றும், கொலைமுயற்சி ஏதும் நடக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

செச்சினியாவில் அமைதியை ஏற்படுத்த ரஷ்யா பெரும் [illegible]யற்சி எடுத்துவரும் வேளையில் [illegible] சம்பவம் நடைபெற்றுள்ளது. செ[illegible]னியாவில் பாராளுமன்ற தேர்தல் இம்மாதம் 27ஆம் திகதி நடைபெற இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.


# ஈராக்குண்டுவெடிப்பில் இறந்தோர் தொகை நூற்றிற்கு மேல்

(பாக்தாத்)

ஈராக்கில் மசூதியில் நடந்த குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை 100ஐ எட்டியுள்ளது. ஈராக்கின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு மசூதிகளில் மனித குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த மசூதிகள் தரைமட்டமாகின. அப்போது தொழுகை நடத்திய ஏராளமானவர்கள் இடி பாடுகளுள் சிக்கினர். அவற்றை அப்புறப் படுத்திய போது நூற்றிற்கு மேற்பட்டோர் இறந்தது தெரியவந்தது. மேலும் 75 போர் படுகாயமடைந்தனர். இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்ந்து நடக்கின்றது.

மசூதியில் மனிதக் குண்டு சர்வ சாதாரணமாக நடந்து வந்து பின்னர் வெடி குண்டை இயக்கி வெடிக்கச்செய்தான் என்று நேரில் பார்த்தவர்கள் கூறினர். குண்டு வெடிப் பிற்கு பிறகு மசூதிச் சுவர்களில் மனிதச் சதைகள் தொங்கியதை காணமுடிந்தது. இந்தக்குண்டு வெடிப்பில் அருகிலிருந்த வீடுகளும் சேதமடைந்தன.

இதற்கிடையில் பாக்தாத் நகரின் தெற்குப்பகுதியில் ஒரு விடுதியில் இரண்டு கார்க்குண்டுகள் வெடித்தன.இதில் ஆறுபேர் இறந்தனர். 40 பேர் படுகாய மடைந்தனர்.



கம்போடிய இராணுவத்திடம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட தரையில்இருந்து விண்ணில் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள் உள்ளன. தீவிரவாதிகளின் கையில் சிக்காமல் இருக்க ஏவுகணைகளை அழிக்க இராணுவம் முடிவு செய்தது. கம்போங் ஸ்பியு மாநிலத்தில் ஏவுகணைகள் நேற்று முன்தினம் குண்டு வைத்து அழிக்கப்பட்டன.

# மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப்பணிகள்

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் மாவீரர் தினத்தை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடுவதற்கு முன்னேற்பாடாக மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாக சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் பாண்டியன் குளம் பிரதேசத்தின் கிராமத்து மக்களும் வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தின் சிரமதானத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். அத்துடன் துணுக்காய் பிரதேச ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லங் களின் துணுக்காய் கிராமமக்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இத்துயிலும் இல்லங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தும் அழகுபடுத்தியும் வருகின்றனர். (24)

## கலந்துரையாடல்

திருமுறிகண்டி கிராம பொது அமைப்புக்களுக்கான மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை திருமுறிகண்டியில் பிரதேசப் பொறுப்பாளர் ஜெகன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் தி. ஜீவானந்தம் தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த செ.தனஞ்செயன் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பொ.சக்திவேல் மற்றும் கிராம பொது அமைப்புக் களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டதுடன், இதில் முக்கிய தீர்மானங் களும் நிறைவேற்றப்பட்டன.

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் விடுதிக் கூரைகள் சீரின்மை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்திய சாலையின் விடுதிகள் சிலவற்றின் கூரைகள் சீரின்மையால் மழைக்காலத்தில் நீர்உட்செல்கின்றது. இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையானது கடந்த பல வருடங்களாகவே இருந்து வருகின்றது. இருந்தும்இதனை யாரும் கவனத்தில் கொண்டு நிலையான வேலைகளை மேற்கொள்ளவில்லை.

தற்போது நோயாளர்கள் படும் அவலத்தை அடுத்து தற்காலிகமாக ஓட்டுக்குமேல் தறப்பாள் போடப் பட்டுள்ளது. இதேவேளை இவ் வைத்தியசாலையின் பின்பக்கம் ஏரே பற்றையாகவுள்ளது. இதனால் இப்பகுதியில் நுளம்புகள் வளர்வதற்கு உகந்த இடமாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

வைத்தியசாலையிலேயே இந்நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)

# எம் தேசியத்தலைவரின் வெற்றிக்கு மகிந்தவின் வெற்றி வாய்ப்பளிக்கப்போகிறது

— கருத்துப் பகிர்வில் க.வே.பாலகுமாரன்

***சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் மகிந்த பெற்றுள்ள வெற்றியானது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் வெற்றிக்கு வாய்ப்பாக அமையப் போகிறது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.***



"புலிகளின் குரல்"வானொலியின் கருத்துப் பகிர்வு நிகழ்ச்சியில் க.வே.பாலகுமாரன் மேலும் தெரிவிக்கையில்; தேர்தல் எங்களுக்கு ஒரு நினைவினை மீட்டுக் கொண்டு வருகிறது. குறிப்பாக மகிந்தவே, தனது வெற்றி ஏற்பட்ட பிறகு, தேர்தல் ஆணையாளரால் வெற்றி அறிவிக்கப் பட்ட பின்னர் கூறிய செய்தி என்னவெனில், 1956 ஆம் ஆண்டை நினைவுபடுத்துகிறது. அன்று பண்டா வென்றதைப் போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

உண்மையிலேயே நாங்கள் தமிழ் பேசும் மக்களும் இதைத்தான் கூறுகிறோம். அதாவது இந்தத் தேர்தல் என்பது 1956 ஆம் ஆண்டு சம்பவம் போல் தொடர்புபடுகிறது. இன்னொரு பண்டா சகாப்தம் என்று மகிந்தவே கூறியிருக்கிறார்.1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் பின்னர் என்று பார்த்தீர்கள் எனில் 1956 ஆம் ஆண்டின் விளைவாகத்தான் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் கருக்கள் விதைக்கப்பட்டன. எங்களுடைய தேசியத்தலைவர் அவர்களே 1958 ஆம் ஆண்டு கலவரம் பற்றியெல்லாம் கூறியிருக்கிறார்.

பண்டாவினது செயற்பாடு காரணமாக- சிங்கள தேசியத்தை ஒன்றிணைத்து-பௌத்த பிக்குகளை ஒன்றிணைத்து-கட்சிகளை ஒன்றிணைத்து இப்பொழுது மகிந்த செய்ததைப் போல் அதே மாதிரியாக ஒன்றிணைத்து மிக முக்கியமான மொழிச்சிக்கலை தேசியவாத இனவெறியாக மாற்றியபோது எங்களுடைய தேசியத் தலைமை உருவாகக் காரணமாக அமைந்தது.அதாவது பிரபாகரன் அவர்கள் உருவாகுவதற்கு பண்டா அவர்கள் காரணமாக இருந்தது உண்மை. அதுபோலவே மகிந்தவின் வெற்றியானது பிரபாகரனின் வெற்றிக்கான வாய்ப்பாக அமையப் போகிறது.

தொடங்கப்பட்டது அந்தப் பண்டாவால் முடிக்கப்படவுள்ளது இந்த மகிந்த பண்டாவால். ஆகவே பண்டா சகாப்தம் என்று மகிந்தவும் பொருத்தமாகத்தான் கூறியிருக்கிறார். சிங்கள மக்களுக்கு இவர் என்ன செய்யப்போகிறார் என்பதை எதிர்காலம் கூறப்போகிறது. பலபேர் கூறுவது போல் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உள்ள முரண்பாடு மிகக் கூர்மையாக முற்றி, இன்னொரு மிகப்பெரிய கிளர்ச்சி அல்லது கலகம் அல்லது ஊழிவிபத்தாக மாறப்போகிற ஆபத்தை நோக்கி சிங்களம் செல்கிறது என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமுமில்லை. அந்த வகையில் தமிழ்மக்கள் தங்களுடைய பாதுகாப்பை எந்த வகையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். தமிழ்மக்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதெல்லாம் மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் எங்கள் மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே இந்த அரசியலைக் கூர்மையாகப் பார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றார் க.வே.பாலகுமாரன்.

# மதுவை முற்றாக ஒழித்து மனித நேயத்தை காப்போம்!

கியூடெக்- கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் மது ஒழிப்பு நிகழ்வு நேற்று ஆரம்பமாகி இன்றும் முல்லைத்தீவு, அளம்பில், சிலாவத்தை ஆகிய பிரதேசங்களில், ஊக்குவிப்பாளர்களினால் இடம் பெறுகிறது.

வீதி நாடகங்கள், கலந்துரையாடல்கள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் இந்நிகழ்வானது, துண்டுபட்ட தனிமனிதன் அல்ல- ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு பணிபுரியும் கியூடெக்- கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் இயக்குனர் அருட் தந்தை ஞா.பீற்றர் அடிகளாரின் ஆசீரோடும் ஆலோசனைகளோடும், வழிகாட்டுதலோடும் நடைபெறுகிறது.

# கால்நடைகள் மானியமாக வழங்கப்பட்டன

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்திக் கழகத்தினரால் சிறந்த கால்நடை பண்ணை பயனாளிகளுக்கு 15 கால் நடைகள் மானியமாக வழங்கிய நிகழ்வு கடந்த திங்கள் காலை பத்து மணிக்கு யோகபுரம் மத்தி கிராமத்தில் மூவேந்தர் முன்பள்ளியில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது போரூட் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையோடு நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி கழக திட்ட ஆலோசனை அலுவலர் சி.சுதாஸ்கரன் தலைமையில் இடம்பெற்றது.

கருத்துரைகளை பாண்டியன்குளம், துணுக்காய் அபி விருத்திக்கழக இணைப்பாளர் செ.சுகுமார், கிராம சேவையாளர் எஸ்.நவரத்தினம் சமூக பொருளாதார அமைப்பின் தலைவர் த.சுந்தரலிங்கம் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் பொது அமைப்பினர், பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# "2006 முன்பள்ளி பாதுகாப்பு ஆண்டு" விசேட செயற்றிட்டங்களுக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் "முன்பள்ளி பாதுகாப்பு ஆண்டு - 2006" காலப்பகுதிக்கான விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள முன்பள்ளிகளின் சமூக அபிவிருத்தியும், சிறுவர் நலனையும் கருத்திற்கொண்டு 3000 முன்பள்ளிகளை மையமாக வைத்து 1000 இடங்களில் விசேட விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களை மேற்கொள்ளவுள்ளதுடன், 82362 மாணவர்களில் 45000 மாணவர்களுக்கு பொருத்தமான ஒரு வைப்பகத்தில் பெற்றோருடன் இணைந்து சிறார் சேமிப்பை மேற்கொள்ளவுள்ளதுடன் 5157 முன்பள்ளி ஆசிரியர்களில் 3500 பேருக்கு சேமிப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன் முன்பள்ளி ஆசிரியர் திறன் வளர்த்தல் தொடர்பான நடைமுறைகளையும் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஒரு முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு சிங்கள பௌத்தர்கள் தள்ளப்பட்டுள்ளனர்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

(கொழும்பு)

சிங்கள பௌத்தம் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டியநிலைக்குத் தள்ளப்பட வேண்டியதுஅவசியம்.அந்த நிலைக்கு அவர்கள் இன்று தள்ளப்பட்டுள்ளனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா .சம்பந்தன் கூறினார்.

சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றியடைந்த பின்னர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துக் கூறுகையிலேயே சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்; தேர்தல் முடிவு மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி கட்சியுடனும் சிஹெல உறுமயக் கட்சியுடனும் ஆரம்பத்தில் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் மூலமாக கிடைத்த வெற்றி என்றே நாங்கள் கருத வேண்டும்.

இந்த இரண்டு கட்சிகளும் ஒரு துவேசமான போக்கைக் கடைப்பிடித்து ஒற்றையாட்சி முறை நாட்டில் இருக்க வேண்டும். சுனாமிக் கட்டமைப்பு சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட அந்த ஒப்பந்தம் கைவிடப்பட வேண்டும். யுத்தநிறுத்தம் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நோர்வேயின் பங்களிப்பு சம்பந்தமாக மீளாய்வு செய்யப்படவேண்டும் எனப் பல விடயங்கள் தொடர்பாக பிரதமர் மகிந்தராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்திருந்தார்கள் இந்தப் பிரச்சாரம் தென்மாகாணங்களில் பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலும் குறிப்பாக கிராமப்புறங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் விளைவாகவே சிங்கள பௌத்த மக்கள் பிரதமருக்குக் கூடுதலாக வாக்களித்துள்ளனர். இதனாலேயே மகிந்த வெற்றி பெற்றுள்ளார். எனவே சிங்களபௌத்த மக்கள் தங்களது நிலைப்பாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அளித்த வெற்றியாகவே கருத வேண்டும்.

இதன் மூலம் சிங்கள பௌத்தம் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு முடிவெடுக்க வேண்டிய கால கட்டத்திற்குள் தள்ளப்பட வேண்டியது அவசியம். அந்த நிலைக்கு இன்றுஅவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே அவர்கள் இந்தநாட்டில் வாழுகின்ற ஏனைய மக்களுக்கும்- தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் தாங்கள் நீதி நியாயம் வழங்குவதற்கு இந்த நாட்டை ஒரு ஒருமித்த நாடாகப் பாதுகாப்பதாக இருந்தால் தாங்கள் எதைச் செய்ய வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்டாய நிலைமைக்கு இன்று சிங்கள பௌத்த மக்களும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் மகிந்தராஜபக்ஷவும் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்றார் அவர்.



தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவரும் வீதிகள் பலவற்றில் மக்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. கிளிநொச்சி சேவியர் கடைச்சந்திக்கருகாமையிலுள்ள மக்கள் குடியிருப்பு வீதி சேறும் சகதியுமாக போக்குவரத்து மேற்கொள்ள முடியாதநிலையிலுள்ளதனையும் பாரவூர்தியொன்று வீதியில் புதையுண்டுள்ளதனையும் படங்களில் காணலாம். (படம்:- சோதி)

# தேசிய மாவீரர் தினத்தை முன்னெடுக்க குடாநாட்டு மக்கள் ஆர்வத்துடன் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளிலுள்ள நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களும் பொது மக்களால் ஆர்வத்துடன் அழகுபடுத்தப்படுவதுடன், மாவீரர் தினத்தை வெகு எழுச்சியாக முன்னெடுக்க குடாநாட்டு மக்கள் தயாராகி வருகின்றனா.**

விடுதலையின் வித்தாகவும், தமிழீழ தேசத்தின் தெய்வங்களாகவும் தமிழ் மக்களால் பூசிக்கப்படுகின்ற மாவீரர்களின் நினைவு நாளை தமிழர்களின் தன்மானம் காத்தநாளை புனிதநாளாக அனுஷ்டிக்கவும் குடாநாடு எங்கும் பொது அமைப்புக்கள், மாதர்சங்கங்கள், பாடசாலைச் சமூகங்கள், அரச ஊழியர் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், சிற்றூர்திசேவைச் சங்கங்கள், ஆசிரிய சமூகம் என அனைத்துத் தரப்பினரும் தயாராகிவருவதுடன் யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் மாவீரர் நினைவுப் பதாகைகள், மஞ்சள் சிவப்பு கொடிகள் என அலங்கரிக்கும் பணிகளும் சிரமதானங்கள், கலை இலக்கியப் போட்டிகள், உதவித்திட்டங்கள் என பல்வேறு பணிகளும் மாவீரர்களின் தியாகங்களை நினைவு கூரும் நடவடிக்கைகளும் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றது. (28)

# தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி

(வலிகாமம்)

தமிழீழ தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். அரச வடிசாலை குடியிருப்புப் பகுதியிலுள்ள கிராமிய அபிவிருத்தி மகளிர் மன்றம் அப்பகுதி மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டிகளை நடத்தியுள்ளது.

அப்போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

இதன்படி

பிரிவு-1

முதலாமிடம்:-யே.மேரிசீலா (தரம்-9), இரண்டாமிடம்:- யோ.தமிழ்ச்செல்வி (தரம்-10), மூன்றாமிடம்:- யோ.எக்சிபா (தரம்-9)

பிரிவு-2

முதலாம் இடம்:- யோ.ஜொனிஸ்ரா (தரம்-6),இரண்டாமிடம்:-வி.துர்ஷாந்தன் (தரம்-7), மூன்றாமிடம்:-அ.ஜீவன் (தரம்-7),

பிரிவு-3

முதலாம் இடம்:-வ.சுகன்ஜா (தரம்-5), இரண்டாமிடம்:-க.கொன்சிகா (தரம்-5), மூன்றாமிடம்:-வி.தனபால் (தரம்-4), அ.சீலன் (தரம்-4) ஆகியோர் பரிசுபெறவுள்ளனர். (37)

# வாக்கு சீட்டுக்களை தம்வசம் வைத்திருந்த ஆறு பேர் சிறிலங்காப் பொலிசாரால் கைது

வவுனியாவில் 63 வாக்குச்சீட்டுக்களை தம்வசம் வைத்திருந்த ஆறு பேர் சிறிலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளைநிற டொல்பின் வாகனத்தைச் சோதனையிட்ட பொலிசார் அந்த வானிலிருந்து 63 வாக்குச் சீட்டுக்களை கைப்பற்றியுள்ளதுடன் வாகனத்தில் இருந்த ஆறு பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர் என்று வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை கள்ள வாக்குப் போடமுயன்ற இருவர் மாத்தளை உடுபிள்ள எனும் இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காரைநகர்ப் பகுதியில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு ஈ.பி.டி.பி. கொலை அச்சுறுத்தல்

காரைநகர்ப் பகுதியில் கடந்த வியாழனன்று நடைபெற்ற சனாதிபதித் தேர்தல்களில் கடமையில் ஈடுபட்ட ஊழியர்கள் பலருகக் ஈ.பி.டி.பி தேச விரோதிகளால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு இருப்பதாக அங்குள்ள பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. கள்ள வாக்கு செலுத்த வந்த ஈ.பி.டி.பி யினரையும் அவர்களின் அடிவருடிகளையும் கள்ள வாக்கை செலுத்த விடாமல் தடுத்த ஊழியர்கள் மீதே தேசவிரோதிகளின் கோபம் திரும்பி இருப்பதாகவும் இதன் தொடர்ச்சியாகப் பொது மக்களை மிரட்டும் நடவடிக்கைகளில் படையினரின் துணையுடன் ஈ.பி.டி.பியினர் ஈடுபட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# அபிவிருத்தியை அடையாளம் காணும் வகையில் விபரங்களைத் திரட்டிவரும் இணையம்

மட்டக்களப்பு மாவட்ட இணையம் கிராமசேவகர் பிரிவுகள் தோறும் அபிவிருத்தியை அடையாளம் காணும் வகையில் விபரங்களைத் திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாவட்டத்தின் 348 கிராமசேவகர் பிரிவுகளில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்றைய நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கு ஏற்ப மக்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து திட்டங்கள் இனங்காணப்பட வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரம் ஒரு வரம்

மனிதரை மட்டுமே பெறுமதியாகக் கருதி அவர்களுக்கு சேதமோ, உயிரிழப்போ ஏற்படும்போது நஷ்டஈடு வழங்குவது பற்றி நாம் கேள்விப் பட்டுள்ளோம். ஆனால் மரத்திற்கும் நஷ்டஈடு வழங்கும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். அண்மையில் இந்தியாவின் உச்சநீதிமன்றம் வழங்கிய மிக முக்கியதுவம் வாய்ந்த தீர்ப்பொன்றில் மரம் வெட்டுபவர்கள் மரத்தின் முழுமையான பெறுமதியை தண்டப்பணமாக செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இங்கு நாம் அறிய வேண்டிய மிக அரிய தகவல் என்னவென்றால் ஒரு மரத்தின் பெறுமதி எவ்வகையில் கணிக்கப்பட்டுள்ளது என்பது தான்.

- குறிப்பிட்ட அம்மரம் வெளியிடும் உயிர்வாயுவின் (பிராணவாயு) அளவு
- கரியமிலவாயுவை உள்ளிழுக்கும் அளவு
- வெள்ளம், வரட்சி என்பனவற்றின் பாதுகாப்பில் அதன் பங்களிப்பு
- நிலக்கீழ் நீரை சேமித்து வடிகட்டும் அதன் செயற்பாடு
- மண்ணின் இடம்பெயர்வைத் தடுப்பதில் அதன் பங்கு

இத் தீர்ப்பினை இன்னும் விரிவாக்கினால் அது வழங்கும் இயற்கை அழகு, பசுமை, நிழல், மனதிற்கு வழங்கும் அமைதி என இது பலவாக நீளும். இது பணப் பெறுமதியால் அளவீடு செய்ய முடியாதது.

ஒட்டுமொத்த மனிதகுலத்தின் நுரையீரலாக மரங்கள் உள்ளதாக குறிப்பிடுவார்கள். ஒவ்வொரு மரமும் உயிர்வாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்றும், காடுகள் உலகின் இலவச குளிர்பதனக்கூடங்கள் என்றும், அழைக்கப்படுகின்றன. தாவர விதானம் (Canopy) அற்ற உலகை கற்பனை செய்தும் பார்க்க முடியாது. கிராமங்களுடன் ஒப்பிடும் போது நகரங்களின் தாவரப்போர்வை மிகவும் குறைவாகக் காணப்படுவதால நகரங்களின் வெப்பநிலை மிக அதிகரித்துக் காணப்படுகின்றது. உதாரணமாக கிளிநொச்சி நகரத்தின் வெப்பநிலை அதிகரிப்புப் பற்றி இப்போது எல்லோரும் பேசுவதை அவதானிக்கலாம். தாவரவிதானமானது உள்வருகின்ற கதிர்வீச்சின் அளவைத்தடுக்கின்றது. கதிர்வீச்சின் பெரும் பகுதி மரங்களினால் உறிஞ்சப் படுகின்றன. 5-15$^{0}$C விழுக்காடு கதிர்வீசலே மீண்டும் தெறிப்படைகின்றன. இதனால் மிகச்சிறிய அளவிலான கதிர்களே நேரடியாக பூமியை வந்தடைகின்றன. எனவே தாவரப்போர்வை இருந்தால் எம்மை வந்தடையும் வெப்பம் குறையும்.

மரம் வளர்க்க வேண்டியதன் அவசியம் பற்றி இவற்றினை விட வேறு கூறத்தேவையில்லை. எமது தமிழர் தாயகம் தாவரப்போர்வையால் மூடப்பட்டு அழகு கொஞ்சும் அமைதிப்பூங்காவாக மாற வேண்டும். எனவேதான் இம்மாவீரர் நாளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வனவளப்பகுதி என்பன பெருத்த அளவில் மரநடுகைத்திட்டங்களை ஏலவே தொடங்கிவிட்டனர். இதிலே நாம் செய்ய வேண்டியது என்ன?

- இயல்பாக நாம் மரங்களை வளர்த்துப் பேணுவோம்.
- எமது வதிவிடம்,வணிகநிலையம், பொதுஇடங்கள்,எமது பார்வைக்குட்பட்ட இடங்களில் நடப்படும் மரங்களை பேணும் பொறுப்பினை ஏற்போம்.
- மரங்களை வெட்டுவதை மிகப்பெரிய குற்றமாகக் கருதி செயற்படும் மனநிலையை வளர்ப்போம்.
- ஒரு மரம் வெட்டினால் நாலு மரம் நடுவோம்.
- பொலித்தீன் பிளாஸ்ரிக் போன்றவற்றினை உணவுப்பொதி செய்தல், உண்ணல் என்பனவற்றிற்காக தவிர்த்து வாழையிலை போன்றவற்றினைப் பயன் படுத்துவோம். (வாழையிலை யில் உண்பதால் ருசி, பசி என்பன தூண்டப்படுவதோடு உடலுக்கு குளிர்ச்சி ஒளி தூய்மை என்பன வற்றினை உண்டாக்கு கின்றது) தாவரவிதானத்தால் மூடப்பட்ட எமது தாயகத்தில் விடுதலைபெற்று மன அமைதியுடன் வாழும் வாழ்விற்காக எம்மை இம்மாவீரர் தினத்தில் ஈடுபடுத்துவோம். (லோ,தீ)

சூழல் நல்லாட்சி ஆணையம்

# சுனாமிக்கு வழங்கப்பட்ட படகு உடைந்து மீனவர்கள் அதிஷ்டவசமாக உயிர தப்பினர்

(வடமராட்சி)

பருத்தித்துறை பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்றிருந்த மீனவர்கள் நடுக்கடலில் படகு உடைந்து கடலுள் வீழ்ந்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிக் கரை சேர்ந்துள்ளனர்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை கொட்டடிப் பகுதியிலிருந்து மீன்பிடித்தொழிலுக்கு அண்மையில் அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனத்தினரால் சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்பட்ட படகில் சென்றிருந்தவேளை பதினாறு கடல் மைல் தொலைவில் அறுபது அடி ஆழமான பகுதியில் படகு இரண்டாகப் பிளந்து படகில் சென்றிருந்த மூன்று மீனவர்கள் அதிஸ்டவசமாக உயிர் தப்பி கரையை வந்து அடைந்துள்ளனர்.

இவ்வாறு சிவபாலசுந்தரம் ஜெயரட்ணம் (வயது-24) த.மகேசன் (வயது 25),எஸ்.இராசேந்தி (வயது-17) என்ற கொட்டடி, பருத்தித் துறையைச் சேர்ந்தவர்களே அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பியுள்ளனர்.

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரச சார்பற்ற வெளிநாட்டு நிறுவனத்தினரால் வடமராட்சிப் பகுதியில் ஆயிரம் படகுகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட படகுகளில் வல்வெட்டி ஆதிகோவிலடி இன்பருட்டி, சக்கோட்டை முனைப்பகுதிகளில் தொண்ணூறு படகுகள் மோசமான நிலைமையில் இருப்பதாக அறிய முடிகின்றது.

# உழவு இயந்திர உரிமையாளர் சங்கப்பொதுக்கூட்டம்

மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேச உழவு இயந்திர உரிமையாளர் சங்கப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் மாவட்ட வாகன சங்கப் பொறுப்பாளர் வி.பிரியங்கன் தலைமையில் நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் மட்டு. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மற்றும் உழவு இயந்திர உரிமையாளர்கள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக நிர்வாகசபைத் தெரிவு இடம் பெற்றது. புதிய உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் தலைவராக குறிஞ்சாமுனையைச் சேர்ந்த செ.அழகரெத்தினம், பிரிவுச் செயலாளராக புதுமண்டபத்தடியைச் சேர்ந்த ச.நேசதுரை, இணைச் செயலாளர்ளாக கன்னன்குடாவில் சி.மகேந்திரராசா, நாவற்காட்டில் த.மகேந்திரன், இ.தியாரெத்தினம் ஆகியோரும் உபதலைவராக கரவெட்டியைச் சேர்ந்த அசிவகுமார், பொருளாளராக கொத்தியாபுலையைச் சேர்ந்த தருமலிங்கம் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மாவீரர்களின் தியாகம் பற்றியும், அவர்கள் ஆற்றிய பணி பற்றியும், அவர்களை ஆண்டுக்கொருமுறை நினைவு கூர்வதன் அவசியம் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார். அத்தோடு உழவு இயந்திர சங்கத்தினர் கட்டமைப்புடன் இருக்க வேண்டுமென்றும் தனதுரையில் வலியுறுத்தினார்.

# யாழ். மாவட்ட செயலகம் நடாத்தும் தேசிய கலை இலக்கியப் பெருவிழா

யாழ். மாவட்ட செயலகம் நடாத்தும் 2005ஆம் ஆண்டிற்கான தேசிய கலை இலக்கியப்பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் கலந்து கொள்கிறார்.

இந்திகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு கலைநிகழ்ச்சிகள், தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (28)

# மகிந்தவின் வெற்றியை கோலாகலமாக கொண்டாடிய ஈ.பி.டி.பி யினர்

(யாழ்ப்பாணம்)

மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை ஈ.பி.டி.பி யினர் சிறிதர் திரையரங்கில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து கோலாகலமாகக் கொண்டாடினர்.

பட்டாசுகளைக் கொழுத்தியும், இனிப்புக்களைப் பரிமாறியும் ஈ.பி.டி.பியினர் மகிந்த ராஜபக்ஷவின் சனாதிபதித்தேர்தல் வெற்றியைக் கொண்டாடினர்.

தமிழரை நசுக்கி இனவாத நலனை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை ஈ.பி.டி.டி.யினர் கொண்டாடியதைக் கண்ட பொது மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர். (33)

# கணனிகள் விநியோகம்

வடக்குக் கிழக்கு வீட்டுப் புனரமைப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பகுதிப் பிரதேச செயலகங்களுக்கு கணனிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை இலகுவாக்குவதே இதன் நோக்கமாகும். இதன் முன்னோடிச் செயற்றிட்டம் 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

# சிங்கள பௌத்தர்களின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்பு

தன்னை சிங்கள பௌத்த மக்களின் தலைவராக வெளிக்காட்டி சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டி நேற்று சனாதிபதியாகப் பதவி யேற்றுள்ளார். ஐம்பதுகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோற்றம் பெற்றி ருந்த போது அது என்ன கொள்கையைக் கொண் டிருந்ததோ அதே கொள்கையை மக்கள் முன் நிறுத்தி அவர் பெற்ற வெற்றியானது சிறிலங்காவின் சரித்திரம் சுழன்று தனது பழைய புள்ளிக்கு வந்திருப்பதையே காட்டு கின்றது எனலாம்.

இந்த வெற்றி இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணப்பட முடியுமென எழுந்திருந்த நம்பிக்கையை - அதாவது சிறிதளவில் இருந்த எதிர்பார்ப்பை பெருமளவுக்கு சிதைத்திருக்கின்றது.

மகிந்தராஜபக்ஷவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அடிப்படைவாதிகளின் செல்வாக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது. அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அடிப் படை வாதிகளின் பிடிக்குள் சென்றிருக் கிறதா? என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பண்டாரநாயக்க குடும்பத்தின் பிடி தளர்ந் திருக்கின்றது. அதாவது பண்டாரநாயக்காக்

அவை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாதவை. ஏனெ னில் ஜே.வி.பியின் மாற்ற முடியாத விரோதி யாக ஐ.தே.க உள்ளது. அதேவேளை ரணில் முன்வைத்த சமாதான கோஷம் ஜாதிக ஹெல உறுமயவை ஐ.தே. கவுடன் நெருங்க விடாமல் செய்திருந்தது.

இதேவேளை இரண்டு கட்சிகளும் சனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டி யிடுவதாயின் ஒரு சில இலட்சம் வாக்கு களைப் பெற்றுக் கொள்ள முடியுமாயினும் சனாதிபதிப் பதவியை பெற்றுவிட முடியாது என்பதும் வெளிப்படை. குறைந்த பட்சம் இவ் இரு கட்சிகளும் இணைந்து போட்டி யிடும் மனநிலையிலும் கூட அவை இருக்க வில்லை. இன்றும் கூட மகிந்தராஜபக்ஷ வுடன் அவ் இரு கட்சிகளும் இணைந்துள்ள போதும் ஒரு கட்சி மீது மறுகட்சி பகைமை உணர்வு கொண்டதாகவே உள்ளது.

அதாவது தீவிர சிங்கள இனவாதத் திற்கு தலைமை தாங்குவது யார்? என்பதில் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டி ருப்பதால் அவை இரண்டும் இணைந்து செயற்பட முடியாத நிலையிலிருக்கின்றன. அவ்வாறான நிலையில் அவ் இரு கட்சி களுக்கும் மகிந்தவுடன் இணைந்து கொள்

காவலர்கள் என்ற சாரப்பட "ரோகண ரஞ்சன" என்ற விருது மகா சங்கங்களால் வழங்கப் பட்டிருந்தது. அதற்கு மேலும் மெருகூட்டும் வகையிலான நடவடிக்கை களை மேற்கொள்வதன் மூலமே ரணிலை தோற்கடிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை அவர் எடுத்தார்.

ரணில் எடுத்திருந்த சமாதான கோஷ நிலைப்பாடு சிறுபான்மை இனத்தவரின் வாக்குகளை அவர் பக்கம் தள்ளிச் சென்றதால் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளை குறிவைத்ததாக மகிந்தவின் பிரச்சாரம் அமைந்தது.

இந்நிலையில் இப்பொழுது அவர் வெற்றி பெற்றுவிட்டார். அவரது வெற்றிக்கான வாக்குகளைத் திரட்டுவதில், ஜே.வி.பியின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆரம்ப காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தளம்பல் நிலையில் இருந்தவேளை ஜே.வி.பியினர் ஒழுங்கு செய்த கூட்டங்களிலேயே மக்கள் திரள் கூடியது. நீலக்கொடிகளை விட சிவப்புக் கொடிகளே கூட்டமைதானத்தை ஆக்கிரமித்திருந்தன.

அதேவேளை ஜே.வி.பி யானது பெரிய கட்சிகளுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு



அதேவேளை மகிந்த தனது வெற்றிக்காகவே ஜே.வி.பியை அர வணைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். வெற்றி பெற்றபின் ஜே.வி.பியுடனான ஒப்பந்தத்தையெல்லாம் மதிக்க மாட்டார் என்ற பிரச்சாரம் சிறுபான்மையினர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. அது நடக்குமா?

அடுத்ததாக சிறிலங்கா சுதந்திரக்

களினால்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெற செய்ய முடியுமென சுமார் 50 ஆண்டுகளாக இருந்த மாயை துடைத் தெறியப்பட்டிருக்கிறது.

மகிந்தராஜபக்ஷவுக்கு வாக்களித் தவர்களும் சரி, வாக்களிக்காதவர்களும் சரி, வெளியே பார்வையாளர்களாக இருந்தவர் களும் சரி மகிந்தராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றால் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஏற்படாது என்ற அடிப்படையான முடிவைக் கொண்டி ருந்தனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவினால் கூட அவ்வாறு தீர்வைக்கொண்டு வந்து விட முடியாது என்பதை நன்றே விளங்கிக் கொண்டுள்ளனர். இதற்கு பேச்சுவார்த்தை என்றும் வேறும் பல்வேறு வடிவங்களிலும் காலத்தை இழுத்தடித்து தமிழ்மக்களின் போராட்டத் தைப் பலவீனப்படுத்தி சிதைத்து அழித்து விடுவதே ரணிலின் திட்டம் என்பது கடந்த காலத்தில் வெளிப்பட்டமையே காரண மாகும்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் போக்கும் அவருடன் இணைந்துள்ள அடிப்படை இனவாதிகளின் கூச்சல்களும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூல மான தீர்வு குறித்த நம்பிக்கை மிக அதிகளவில் அற்றுப் போவதற்கு காரணமாக உள்ளன.

அதாவது மகிந்தராஜபக்ஷ அமைதிவழித் தீர்வு தொடர்பாக தான் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் குறித்து தெரிவித் துள்ள கருத்துக்கள்- யுத்தநிறுத்த மீளாய்வு, ஒற்றையாட்சித் தீர்வு போன்றவை- அனை வருக்குமே அதற்கான நம்பிக்கையை சிதைத்துள்ளது.

அடுத்ததாக இந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெற்ற வெற்றி ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் செல்வாக்கை வெளிப்படுத்தி இருப்பது மட்டுமல்ல எதிர்காலத்தில் அவை மேலும் வளர்ச்சியடைய உதவப் போகின்றது.

இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட போது ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமையவும் தனித்து விடப்பட்டி ருந்தமையே உண்மையாகும். அதாவது

வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ விற்கு கட்சிக்குள்ளிருந்த போட்டி அதிலும் பண்டாரநாயக்க குடும்பத்தால் எழுந்த அழுத்தம் என்பவற்றை வெற்றி கொள்ளவும் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய சமாதான கோஷத்துக்கு போட்டியாகவும் வெளிப்படையான இனவாதத்தை முன்வைக்க வேண்டிய தேவை இருந்தது.

உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதும் சிறந்த கட்டமைப்பைக் கொண்டதாக உள்ள மையால் அதன் பிரச்சாரங்களும் காத்திர மானதாக இருந்ததாக அவதானிகள் தெரிவிக் கின்றனர். அதேவேளை ஜே.வி.பி க்கு மகிந்தவின் வெற்றி தவிர்க்க முடியாததாக இருந்தது. மகிந்த தோல்வியடைந்தால் ஜே.வி.பியின் தலைவர் முதல் முக்கியமான வர்கள் சிறையில் இருக்க வேண்டியிருக்கும் அல்லது நாட்டை விட்டு தப்பி ஓடவேண்டி



இவ்வாறான நிலையில் வெளிப்படையான இனவாதத்தை முன்வைக்காத அதேவேளை தனது தோற்றத்தை சிங்கள பௌத்த காவலன் என்ற வகையில் அமைத்துக் கொள்வதற்காகவே அவர் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றை தம்முடன் இணைத்துக் கொண்டார்.

உண்மையில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பன முன்வைத்த சில நிபந்தனைகளை அவர் ஏற்றுக் கொண்டிருக்காது விட்டால்கூட அக் கட்சிகள் அவருடன் இணைந்திருக்கக் கூடும். ஆனரல் அவற்றை அவர் முற்று முழுதாக ஏற்றுக் கொண்டமைக்கு காரணமும் தனது தோற்றத்தை அவ்வாறு பலப்படுத்திக் கொள்ளவே.

அதாவது ஏற்கனவே ராஜபக்ஷ குடும்பத்திற்கு சிங்கள - பௌத்தத்தின்

ஏற்படும் என்ற நிலை கூட இருந்தது.

அத்துடன் மகிந்த தோல்வியடைந் தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவின் கை ஓங்கும். இதனால் ரணில் ஜே.வி.பி மீது நடவடிக்கை ஏதாவது எடுத் தால் கேட்கக்கூட எவரும் இருக்கமாட்டார் கள் என்ற நிலை கூட இருந்தது. இந் நிலையில் ஜே.வி.பியின் பிரச்சாரம் மிகத் தீவிரமானதாக இருந்தது.

ஆனால் இப்பொழுது மகிந்த வென்றுவிட்டார். இதனால் ஜே.வி.பியின் செல்வாக்கு அதிகரித்து விட்டது. இதனை ஜே.வி.பி எவ்வாறு பயன்படுத்தப் போகிறது? ஜே.வி.பியின் அடிப்படை தந்திரோபாயம் ஐ.தே.கவை அழிப்பதல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சிறிது சிறிதாக அரித்து தான் வளர்வதே என்ற அச்சம் சு.க வினர் மத்தியில் உண்டு. அது தொடருமா?

கட்சிக்குள் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு இருந்த பிடி தளர்ந்துள்ளமை இந்தத் தேர்தல் மூலம் நடந்திருக்கின்றது. அதாவது இத் தேர்தலில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அநுரா பண்டாரநாயக்கவும் எடுத்திருந்த நிலைப்பாடு மகிந்தவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் பட்டதற்கு மாறாக அவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விடவில்லை என்ப தையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. பண்டாரநாயக்க குடும்பத்தின் பரம்பரை மாவட்டமாகிய கம்பஹாவிலேயே மகிந்த வால் வெற்றிக் கொள்ள முடிந்திருக்கிறது. சில வேளைகளில் பண்டாரநாயக்க குடும் பத்தின் தீவிர ஆதரவாளர்கள் மகிந்தவுக்கு ஆதரவாக செயற்படாது போய் இருந்தாலும் அவர் சனாதிபதியாகிவிட்ட நிலையில் பண்டாரநாயக்க குடும்பத்தின் செல்வாக்கு தளர்ந்துவிட்டதாகவே கொள்ளமுடியும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 15 ஆம் திகதி பிரியாவிடை உரை ஒன்றை ஆற்றவிருந்தார். இந்த உரையில் மகிந்தவுக்கு எதிரான கருத்துக்களை அவர் கூறுவார், அதன் மூலம் ஐ.தே.க தேர்தலில் பயன் பெறமுடியும் எனப் பலரும் எதிர் பார்த்தனர். ஆனால் போட்டி மிகவும் பலமாக இருப்பதாக தேசிய புலனாய்வுப் பணியகத் தினர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு வழங்கிய இரகசிய தகவல் காரணமாக அவர் பிரியாவிடை உரையையே கைவிட்டு விட்டார்.

**வேலவன்**

இன்றும் கூட சு.கவின் தலைமைப் பதவி சனாதிபதி சந்திரிகாவிடம் உள்ளது. ஆனால் இது தொடர்ந்தும் அவரிடம் இருக்குமா? அநுராவுக்கு என்ன நடக்கப் போகிறது? என்பதெல்லாம் கேள்விகளாக உள்ளன. எனினும் உடனடியாக அவர்கள் எல்லாம் தூக்கி வீசப்பட்டு விடுவார்கள் என்று கூறிவிட முடியாவிட்டாலும் படிப்படி யாக ஓரங்கட்டப்பட்டு விடவும் முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மகிந்தராஜபக்ஷ மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பல இருக்கின்றன. அவர் சிங்கள பௌத்த வேடத்துடன் மட்டுமல்ல கிராமமக்களின் தோழனாகவும் வேடம் புனைந்திருந்தமையும் அவரது வெற்றிக்கு ஒரு காரணமென கூறப்படுகிறது. அதனை எவ்வாறு செயலில் காட்டப் போகிறார்? என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

# தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதில் பாடசாலையின் பங்கு

கல்வியானது மனிதனுக்குத் தெளிவாக அடிப்படை நேர்மைப் பண்புகள் பற்றிச் சிந்திக்கவும், செயலாற்றவும் சரி - தவறு என்பவற்றை நிர்ணயிக்கவுமான புரிந்துணர்வைத் தரவேண்டும். ஒவ்வொரு தனியாளுக்கும் முழு மனித வளர்ச்சியை அடைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

கல்வியின் பல்வேறு மட்டங்களிலும் சமமான வாய்ப்புக்கள் வழங்கப்படாவிட்டால் சமூக நீதியை போதிய அளவிற்குப் பேண முடியாது. "உள ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் என்பவற்றிலிருந்து கல்வியை வேறாக்கல் செயற்கையானதும் விரும்பத்தகாததுமாகும். வெறும் பாட விடையங்களை மட்டும் கற்றலுக்கு வழி செய்து மட்டுமட்டான ஓர் எண்ணிக்கையுடைய திறன்களை மட்டும் விருத்தி செய்வதற்கு கவனம் செலுத்துவதானது வளரும் பிள்ளையின் பல்வேறுபட்ட ஆளுமை விருத்தியிலும் பெரும்பகுதி கவனியாது விடப்படுவதை உணர்த்தியுள்ளது. அதனால் இன்று கல்வி முறையில் கல்வி வாய்ப்புக்களை தொகை ரீதியில் விரிவு செய்யும் நோக்குக் கைவிடப்பட்டு கல்வியின் பண்பு ரீதியான (QULITATIVE) சீர்திருத்தங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன.

பிள்ளைகளின் கல்வியை சமூக சுற்றாடலுடன் இணைத்தல், அவர்களின் பல்வகை ஆளுமை வளர்ச்சியை விருத்தி செய்தல், பல்வகைத் தகைமைகளிலும் மேம்பாடடையைச் செய்தல் (COMPETANCY BASED DEVELOP MENT) என்பவற்றின் மூலம் ஆற்றல் உள்ள தலைவர்களாக மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் தமது சமூகத்தை நன்கு புரிந்து கொள்ளவும் அதில் பயனுள்ள முறையில் பங்கேற்கவும் தேவையான அனுபவங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

மாணவரிடையே தலைமைத் திறன் விருத்தியை (LEADER SHIP DEVELOPMENT) ஏற்படுத்தி நாட்டுக்கு வேண்டிய தலைவர்களை உருவாக்க வேண்டியது "சுயத்துவம்", தன்னம்பிக்கை", சமூகப்பொறுப்பு" மிக்க ஆசிரியர்களது கடமையாகும்.

தலைமைத்துவம் ஒருவருடைய ஆளுமையுடன் இணைந்த தோற்றப்பாடாகும். ஆளுமை விருத்தியின் முழு நிறைவு தலைமைத்துவமாக முகிழ்கின்றது.

ஆளுமை விருத்தியானது

- ☐ உடல் விருத்தி உடற்கட்டமைப்பு
- ☐ உளத்திறன், உள ஆற்றல் அறிக்கை ஆற்றல்
- ☐ மனவெழுச்சியை நெறிப்படுத்திக் கட்டுப்படுத்தல்
- ☐ சமூகமயமாக்கல், திறன் குழுவோடு இணைதல், குழுவிற்குத் தலைமை தாங்குதல்,
- ☐ மொழியாற்றல்
  - * அரசியல் தலைவர்கள் பேச்சாற்றல்
  - * இராணுவத் தலைவர்களின் உடற்தொனி
- ☐ அழகியல் வசீகர ஆற்றல்
- ☐ ஆன்மீகப் பார்வை

போன்ற பண்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதாகும்.

ஒரு தலைவனுடைய செயல் பலரின் வாழ்வில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தவல்லது. ஒரு தலைமைத்துவத்தின் திறமையிலேயே ஒரு நாட்டின், நிறுவனத்தின் வெற்றி தங்கியுள்ளது. எனவே நல்ல தலைமைத்துவப் பண்புகளை உருவாக்கவல்ல ஆசிரியர் குழாத்தையே பாடசாலைச் சமூகம் வேண்டி நிற்கின்றது.

இயற்கையாகவே தலைமைத்துவப் பண்புள்ளவர்களிடம்

- ☐ மக்களின் நல்வாழ்வுக்காக சக்திமிக்க எதிர்காலக்கனவு (VISION)
- ☐ இக்கனவை எளிமையான மொழியில் தெளிவாகப் பிறருக்கு வெளிப்படுத்தும் ஆற்றல்
- ☐ தன்னைப் பின்பற்றுபவர்கள் தன் கனவை பிறருக்கும் எடுத்துக் கூறுவார்கள் என்று அவர்கள் மீது நம்பிக்கையும் நல்ல மனப்பாங்கும்.
- ☐ பிறரிடம் முன்சென்று பழகும் திறன்
- ☐ சக்தி மிக்கவர்கள்.
- ☐ மனச்சாட்சியுடன் நடப்பவர்கள்
- ☐ ஒத்துப்போகக்கூடியவர்கள்.
- ☐ உணர்ச்சி ரீதியாக நிதானம் கொண்டவர்கள்.
- ☐ தன்னம்பிக்கை நிறைந்தவர்கள்
- ☐ சமூக பொருளாதார அந்தஸ்து
- ☐ தன் குழுவினரைவிட உயர்வான கல்வி
- ☐ விரக்தியை சிறப்பாகக் கையாளும் திறன்
- ☐ பிறர் மீதுள்ள கோபத்தை புத்திசாலித்தமாக வெளிப்படுத்துவர்.
- ☐ வெற்றி தோல்விகளை நல்ல முறையில் ஏற்றுக்கொள்வர்.
- ☐ தன் மேலுள்ளவர்களின் அதிகாரத்தை நல்ல முறையில் ஏற்கும் மனப்பாங்கு.
- ☐ கூடுதலான பொறுப்புணர்வுடன் சாதிக்கும் ஆற்றல்

போன்ற குணாதிசயங்கள் பலவற்றைக் காணமுடியும்.

வகுப்பறையில் பல்வேறுபட்ட குணாதிசயங்கள் கொண்ட மாணவர்களை ஆசிரியர்கள் சந்திக்கின்றனர். சில மாணவர்கள் நுண்ணறிவு, மேன்மையடையும் அவா அதிகாரத்திற்கான ஆசை, தன்னம்பிக்கை, சக்திமிக்க போக்கு என்பவற்றைப் பிறப்பிலே கொண்டவர்களாக எவ்விடயத்தையும் முன்நின்று செய்ய எத்தனிப்பதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய மாணவர்களை உரிய பருவத்திலேயே இனங்காண்பதன் மூலம் அவர்களின் இத்தகைய தலைமைத்துவப் பண்புகளை

- ☐ அறிவு ரீதியாக வளர்த்துக்கொள்ளல்
- ☐ சமூகத் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளல்
- ☐ பிரச்சினைகளை இனங்காணும் திறனையும் தீர்வுகாணும் திறனையும் வளர்த்துக்கொள்ளல்
- ☐ மன எழுச்சிகளை நெறிப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ளல்
- ☐ அனுபவம், பயிற்சிகளை வளர்த்துக்கொள்ளல்

போன்றவற்றை வளர்த்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். அத்தோடு ஆசிரியர் சமூகமும் தமது அறிவு, ஆற்றல், திறன்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து தம்மை வளப்படுத்த வேண்டும்.

இன்றைய நவீன கல்வி உளவியலில் தலைமைத்துவ உளவியல் ஒரு பிரதான ஆய்வுத்துறையாக வளர்ச்சியுற்று வருகிறது. தலைமைத்துவத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும் (MARREN BERMIS) எனும் ஆய்வாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

- ☐ இளைஞர்கள் தலைமைத்துவத்திற்காக கடுமையாக உழைக்கின்றனர்.
- ☐ முதியவர்கள் அதற்காக ஏங்குகின்றனர்
- ☐ பெற்றோர் அதனை இழந்துவிட்டனர்
- ☐ காவல்படையினர் அதனைத் தேடுகின்றனர்
- ☐ நிபுணர்கள் அதற்கு உரிமை கோருகின்றனர்
- ☐ கலைஞர்கள் அதனைக் கலக்குகின்றனர்
- ☐ அறிஞர்கள் அதற்கு ஆசைப்படுகின்றனர்
- ☐ தத்துவஞானிகள் அதற்கும் சுதந்திரத்திற்கும் இடையில் இணக்கம் காண முயல்கின்றனர்.
- ☐ சமயவாதிகள் மனச்சாட்சிக்கு தொடர்புபடுத்துகின்றனர்
- ☐ அரசியல்வாதிகள் தாமே தலைமைத்துவத்தினை செய்யவேண்டும் என அங்கலாக்கின்றனர்

என தனது ஆய்வின் மூலம் பலவாறு விளக்கியுள்ளார்.

ந. சிவநேசர்
ஆசிரிய ஆலோசகர் சமூகக்கல்வி,
கிளிநொச்சி.

## புதிய கட்டடங்களை நிர்மாணிக்க பிரதேச அனுமதி பெறுக!

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி பிரதேசசபை பகுதிகளிற்குட்பட்ட கட்டடங்கள் அமைப்பதற்காக கரைச்சி பிரதேசசபையின் அனுமதியினைப்பெற்று புதிய கட்டடங்களை அமைக்கும் வண்ணம் கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிய கட்டடம் அமைப்பவர்கள் கரைச்சிப் பிரதேச சபையில் அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று கட்டடம் அமைக்கப்படவுள்ள காணியின் உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் அல்லாத விடத்து மேற்படி காணி தங்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதென காணி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கடிதம், மற்றும் கட்டட வரைபடம், வரைபடம் வரைந்தவரின் கையொப்பத்துடன் பதவி முத்திரை இடப்பட்டிருத்தலுடன் வரைபடத்தில் அயற்குடியிருப்பாளரின் கிணறு, மலசலகூடம் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் கட்டட விண்ணப் படிவத்தினைப் பூர்த்திசெய்யப்பெற்று கோவையிட்டு பிரதேசசபையில் ஒப்படைத்து அதற்கான உறுதிப்படுத்தும் கடிதத்தினை பெற்று அதன் பின் கட்டடப்பணிகளை ஆரம்பிக்கும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு கிடுகு வழங்கல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய்ப் பிரதேசத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்குக் கிடுகு வழங்கிய நிகழ்வு கடந்த 15ஆம் திகதி காலை 9.30 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலர் செயலகத்தில் இடம் பெற்றது. இக் கிடுகு வழங்கும் நிகழ்வானது புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு அரச அதிபரின் ஒழுங்குபடுத்தலில் இக் கிடுகுகள் வழங்கப்பட்டன. இவ் வகையில் துணுக்காய் பண்ட் வீதியில் முதல் கட்டமாக 12 இடம்பெயர்ந்த மக்களுக்கு துணுக்காய் கிராம சேவையாளர் வ.ப. சண்முகநாதனால் வழங்கப்பட்டது.

## சூழல் மேம்பாட்டு வளாகத்தில் 5 ஆயிரம் மரக்கன்றுகள் நாட்டல்

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தால் பிரகடனபடுத்தப்பட்டு தாயகமெங்கும் எழுச்சியுடன் நடைபெற்று வரும் சூழல் மேம்பாட்டு வாரமான 14-20 வரையான காலப் பகுயில் தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு வனவிழிப்புணர்வுப் பிரச்சாரதிட்டத்தினை முன்னெடுத்து வருவதுடன் முள்ளியவளைப் பிரதேசத்திலும் பாரிய மரநடுகை திட்டமொன்றினை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்த வகையில் கடந்த 15ஆம் திகதி ஐயாயிரம் மரக்கன்றுகளை இப்பகுதியில் நடுகை செய்துள்ளது.

இப்பணியில் பொன்நகர் கிராம மக்கள் பங்கெடுத்து வருகின்றனர். இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக தமிழீழ தேசிய மாவீரர் நாளையொட்டி 700 பழமரக்கன்றுகளும் இப்பகுதியில் நடுகைசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தவிர இழந்த வனங்களைப் ஈடுசெய்தலும் எஞ்சிய வனங்களைப் பாதுகாத்தலும் என்ற அடிப்படையில் நாளை 21ஆம் திகதியன்று புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள பொதுவிளையாட்டு மைதான வளாகத்தில் இப்பிரதேச செயலரின் அனுசரணையுடன் மரநடுகைத்திட்டமொன்று முன்னெடுக் கப்படவுள்ளது.

## கருத்தூட்டல்


முல்லைமாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரும் திலீபன் மருத்துவ முதலுதவி அணியினரும் சுகாதார தொண்டர்களும் இணைந்து மழைகாலத் தொற்று நோயிலிருந்து பாதுகாத்தல் சார்பான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி கற்சிலைமடு சிலைப்படிக் கிராமத்தில் நடைபெற்றது .(05)

# சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு

## - ஹரி குணதிலக

இலங்கையின் சமாதான முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக முன்னாள் விமானப்படை தளபதி ஹரிகுணதிலக தெரிவித்தார்.மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கியுள்ள ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதை அனுமதிக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# 02ஆம் ஆண்டு நினைவு தினம்

| மண்ணில் முத்தாக | | மண்ணில் வித்தாக |
|---|---|---|
| 26 - 10 - 1983 |  | 20 - 11 - 2003 |

## நாட்டுப்பற்றாளர்- அகிலன்

## (நாகன் – பிரதீபன்)

நாவற்காடு - வரணி

எம் பாச உறவே பண்பான எம் சோதரனே!
பாதியில் எம்மைப் பரிதவிக்கச் செய்த மர்மம்தான் என்ன
சிரித்திடும் உன் பூ முகத்தை பொறுக்காத காலனவன்!
மின்னும் நொடிப்பொழுதில் மின்வழியில் உன்னுயிரை கொண்டு சென்றதேனோ!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது உன் துயரம்
மீண்டும் ஒருமுறை பிறப்பெடுத்து வந்துவிடு!
உன் ஆத்மா சாந்தி பெற!
இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்!.

தற்காலிக முகவரி:-
நாகதம்பிரான் கோயில் வீதி,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி. (6931)

என்றும் உன் நினைவில்
**குடும்பத்தினர்,**
*சகோதரி- பூவிழி (போராளி).*

# சாவு அறிவித்தல்

## திரு.ஐயாத்துரை இராஜதுரை

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசன இலாகா TA)

யாழ்ப்பாணம் கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் தற்காலிகமாக வசித்து வந்தவருமாகிய திரு.ஐயாத்துரை இராஜதுரை அவர்கள் 17.11.2005 அன்று கொழும்பில் இறைபதம் எய்தினார். பூதவுடல் 17.11.2005 பி.ப. 2.30 மணிவரை களுபோவில பீரிஸ் மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு நெரிமால மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*திருமதி ச. இராஜதுரை (மனைவி),*
*"மஜிஸ்ரிக் அபார்ட்மென்ட்"*
*21 1/1 புகையிரத நிலையவீதி.*
*கொழும்பு – 6*
*தொ. இல. 0112–596102*

*தகவல்:–*
*குடும்பத்தினர்.*

(சி.13278)

# என்மீது சுமத்தப்பட்ட தற்காலிக பொறுப்பாகவே சனாதிபதிப்பதவியைக் கருதுகின்றேன்

## - தேர்தல் செயலகத்தில் மகிந்த கருத்து

(கொழும்பு)

சனாதிபதிப் பதவியை வரப்பிரசாதமாகக் கருதாமல் என்மீது சுமத்தப்பட்டுள்ள தற்காலிக பொறுப்பாகவே இதனைக் கருதுகிறேன் என்று சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்; தேசியஅபிலாசையின் அடிப்படையில், சமாதானத்தைக்கொண்டு செல்வது, பொருளாதாரத்தை மேம்படுத்துவது போன்ற பணிகளைத் தாம் மேற்கொள்ளவுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

தயானந்த திசாநாயக்க விரும்புவாராக இருந்தால், அவர் ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்கப்படும் என மகிந்தராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளரான சிறிதுங்க ஜெயசூரிய கருத்துத் தெரிவிக்கையில்; மக்களின் அடிமைத்துவத்தைக் களைந்து தமிழ்பேசும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டிய முக்கியமான இடத்திற்கு நாடு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

முதல்தடவையாக தென்னிலங்கையின் பெரும்பான்மை சிங்களவர்களின் விருப்பத்தின் பேரில் சனாதிபதி ஒருவர் தெரிவாகியுள்ளார்.

இது நாட்டைப்பொறுத்தவரையில் நன்மை பயக்கும் செயல் அல்ல என அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்கள்தென்னிலங்கையின் சிங்கள தலைமையை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

இதனடிப்படையில் இன்று பிரிந்து செயற்படுகிறது. எனவே அதனை ஒன்றுபடுத்துவதற்கு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது புதிய சனாதிபதியின் பொறுப்பாகும்.

இல்லையேல் இதன் பெறுபேறுகள் விரும்பத்தகாதவையாகவே இருக்குமென அவர் எச்சரித்தார்.

இந்த நிலையில் , வழங்க முடியாத பல வாக்குறுதிகளை முன் வைத்துள்ள புதிய சானதிபதி அதனை முன்கொண்டு செல்வதற்கு தமது கட்சி போராட்டங்களை நடத்தும் என அவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய சோசலிச சமத்துவ கட்சியின் சனாதிபதி வேட்பாளர் விஜய டயஸ், செயற்படுத்த முடியாத வாக்குறுதிகளை வழங்கிப் பெற்றுக் கொண்ட சனாதிபதிப் பதவியின் மூலம் மக்களுக்கு சேவை செய்யாத வரலாற்றையே இலங்கை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

எனவே நாட்டின் யுத்தத்திற்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

# பதவியுயர்வு வழங்க மறுத்தமைக்கெதிராக விமானப்படை அதிகாரிக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையின் நிர்வாக இயக்குநருக்கு சிறிலங்கா உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விமானப்படையின் ஆறு பிளைட் லெப்டினன்களுக்கான பதவி உயர்வு அளிக்கப்படாததையடுத்து அவர்கள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்ந்தனர்.

தங்களுக்கு கீழ் நிலையில் உள்ளோருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தங்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டிருப்பதாகவும் ஆறு விமானப்படை லெப்டினன்கள் தங்களது மனுவில் தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கின் எதிர்த்தரப்பினரான விமானப்படைத்தளபதி ஏர்மார்ஷல் டொனால்ட் பெரேரா, நிர்வாக இயக்குநர் ஏர்வைஸ் மார்ஷல் அருந்தவநாதன் உள்ளிட்ட ஏழு பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் முறைப்பாடு செய்த ஆறு பேருக்கான பணி இடத்தை உயர்நிலையில் ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் வழக்கைத் தொடர்ந்தவர்களில் ஒருவரான விஜயக்கோன் என்பவரது விடுப்பு மனுவை நிராகரித்த நிர்வாக இயக்குநர், விடுப்புக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடருவீர்களா? என்று கேள்வி எழுப்பி விமர்சனம் செய்துள்ளார். பின்னர் அவரை மட்டக்களப்பு பிரதேசத்துக்கு பணியிடம் மாற்றம் செய்தார்.

அருந்தவநாதனின் இந்த செயற்பாடுகளை நீதிமன்றில் விஜயக்கோன் தரப்பில் அவரது சட்டத்தரணிகள் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த தலைமை நீதிமன்றம் அருந்தவநாதனுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் ஆறு வாரங்களுக்குள் இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை அடுத்தஆண்டு பெப்ரவரி முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தது.

# சனாதிபதித் தேர்தல் தினம் வரை 235 வன்முறைச் சம்பவங்கள் பதிவு!

## - 170 பேர் கைது

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தேர்தல்தினம்வரை 235 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் மூன்றுகொலைச் சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாக பவ்ரல் அமைப்பினரும், பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை170 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், தங்காலை, மாத்தறை, வெலிகம, காலி, களுத்துறை, மத்துகம, புளத்சிங்கள, மாத்தளை, அனுராதபுரம், புத்தளம், கம்பஹா ஆகிய பிரதேசங்களிலேயே இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.இறுதியாக மாத்தறை யட்டியானப் பிரதேசத்திலிருந்து வன்முறைச் சம்பவம் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள பொலிசார், முன்னாள் கிரிக்கெட் வீரரும் அவருடைய குழுவினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடாத்தியிருப்பதாகவும் தெரிவித்தனர். எனினும், தேர்தல் தினம்வரை எந்தவிதமான பாரிய வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறவில்லையெனப் பொலிசார் கூறுகின்றனர்.

# கிளிங்டன் வருகை

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதியும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளிற்கென ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட சிறப்புத்தூதுவருமான பில் கிளிங்டன் இம்மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் ஆர்ஷே பிராந்தியத்திற்குச் செல்லும் பில்கிளிங்டன் அதன் தொடர்ச்சி யாக இலங்கைக்கும் வரவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சில இடங்களிற்கு இவர் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் **2 1/2** மாதத்திற்குள்.

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத்தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | - |
| எிபொருள் நிரப்பு நிலையத்தில் எிபொருள் நிரப்புபவர் | 400 | - |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | - |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
சகல நாடுகளுக்கும் செல்லக் கூடிய கடவுச்சீட்டு, பாஸ்போட் அளவு படம்16 (கலர்), வீட்டுப் பணிப் பெண்கள் 200 பேர். வயதெல்லை 19 – 45 சம்பளம் 20000.
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புக்கள் உள்ளன.பயணம் **2 1/2** மாதத்திற்குள்.

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சுவேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாட்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஓப்பிறேட்டர், லோடர்,ஸ்கவேட்டர், J.C.B ஓப்பிறேட்டர்). | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக். | 10 |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
பாஸ்போட்,பாஸ்போட் அளவு புகைப்படம் 05,
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு :- முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. (6914)

# தனது குழு அறிக்கைக்கு ஆதாரமான ஆவணங்களை வழங்கவோல்கர் மறுப்பு

(புதுடில்லி)

**எண்ணெய்க்கு உணவு திட்டத்தின் கீழ் நடந்த விற்பனைகளில் ஆதாயம் அடைந்த தனியார் மற்றும் நிறுவனங்களின் பட்டியலைக் கொடுத்த பால் வோல்கர், தனது முடிவுக்கு ஆதாரமான ஆவணங்களை வழங்க இயலாது என்று ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் நிருபம் சென்னிடம் தெரிவித்துள்ளார்.**

எண்ணெய்க்கு உணவுத் திட்டத்தின் கீழ் பலன் பெற்றவர்களின் பட்டியலில் பல இந்திய நிறுவனங்களின் பெயர்களும் காங்கிரஸ் கட்சியின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. பலன் பெற்ற தனியார்களின் பட்டியலில் இந்திய வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர் நட்வர் சிங்கின் பெயரும் இடம்பெற்றுள்ளது. எதிர்க்கட்சிகளின் புகார் மற்றும் கண்டனங்களைத் தொடர்ந்து நட்வர்சிங்கின் பொறுப்பில் இருந்த வெளியுறவுத்துறை அவரிடமிருந்து மாற்றப்பட்டது.

அவர் இலாகாஇல்லாத அமைச்சராக அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிக்கிறார். இதற்கிடையில் வோல்கர் குழு எண்ணெய்க்கு உணவுத்திட்டத்தால் பலன் பெற்றவர்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்ட இந்தியர்கள் மற்றும் இந்திய நிறுவனங்கள் குறித்த உண்மைகளை அறிய உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பதாக் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றையும் வோல்கர் குழுவின் முடிவுக்கு அடிப்படையாக அமைந்த ஆவணங்களைப் பெற சிறப்புத் தூதுவராக வீரேந்திர தயாளையும் இந்திய அரசு நியமித்தது. வீரேந்திர தயாள் ஐ.நா. சபையில் இணை இயக்குநர் ஜெனரலாகப் பணியாற்றியவர். தனது கடமையை நிறைவேற்ற வீரேந்திர தயாள் நியூயோர்க் நகருக்கு போய்ச் சேர்ந்தார். அவர் இன்னும் ஓரிரு தினங்களில் பால் வோல்கரைச் சந்தித்துப் பேச முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது.

## அப்பு பிணை கேட்டு மனுத்தாக்கல்

(சென்னை)

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அப்பு மீண்டும் பிணை வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர், விஜயேந்திரர் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் ஜெயேந்திரர் உட்பட 20 பேர் பிணையில் விடுதலையானார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான அப்பு பிணை கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இப்போது அவர் மீண்டும் உயர்நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நீதிபதி சர்தார் ஜக்காரியா உசேன்முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அப்பு சார்பாக வாதாடிய வழக்கறிஞர்கள் அப்பு இருதய நோயால் அவதிப்படுகிறார். சிறையில் சரியான சிகிச்சைகள் கிடைப்பதில்லை. அமெரிக்கா சென்று சிறப்பு சிகிச்சை பெற வேண்டியுள்ளது. எனவே அவருக்கு பிணை தர வேண்டும் என்றார்.

அதற்கு பொலீஸ் தரப்பு வழங்கறிஞர் கடும் ஆட்சேபனை தெரிவித்து இந்த வழங்கில் பதில் மனுதாக்கல் செய்ய இரண்டு வார கால அவகாசம் வழங்கும்படி கேட்டார். இதைக்கேட்ட நீதிபதி 28-11-2005இற்கு வழக்கை தள்ளி வைத்தார். 28ஆம் திகதிக்குள் பொலிஸ் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டார்.



டில்லி நொய்டாவில் உள்ள மாமுரா கிராமத்தில் ஒரு குழந்தை நான்கு கால்கள் நான்கு கைகளுடன் பிறந்தது. அது மூன்று மாதமாக நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஹைதராபாத்தில் நாய்க்கண்காட்சி

(ஹைதராபாத்)

ஹைதராபாத்தில் இன்று நடைபெறவுள்ள நாய்க் கண்காட்சியில் பத்திற்கும் மேற்பட்ட மாநிலங்களைச் சேர்ந்த 335 நாய்கள் பங்கேற்கின்றன.

ஹைதராபாத்தில் இன்று "ஜகான் 2005" என்ற நாய்க் கண்காட்சி நடைபெறுகிறது. இந்தக்கண்காட்சியில் 37இனங்களைச்சேர்ந்த நாய்கள் பங்கேற்கவுள்ளன. இதில் பிரிட்டன்,அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரேசில், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆறு இனங்களைச்சேர்ந்த நாய்களும் பங்கேற்கவுள்ளன. வெறிநாய்க் கடி நோய் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி நடக்கவுள்ளது.ஆந்திராவிலிருந்து மட்டும் 150 இற்கும் மேற்பட்ட நாய்கள் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

## தார் பாலைவனத்தில்போர் ஒத்திகை சீன இராணுவ குழுவினர் பார்வையிட்டனர்

(போக்ரான்)

ராஜஸ்தான் மாநிலம் தார் பாலைவனத்தில் இந்திய இராணுவம் மற்றும் விமானப் படைகள் கூட்டுப் போர் ஒத்திகையில் ஈடுபட்டன. இதை சீன இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர்.

இந்திய இராணுவம் பல்வேறு நாடுகளின் இராணுவங்களுடன் போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த சில வாரங்களாக மேற்கு வங்கம் கலைகுண்டாவில் அமெரிக்க இராணுவத்துடன் போர் ஒத்திகை நடத்தியது. இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலம் தார்பாலைவனத்தில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்திய போக்ரானுக்கு அருகில் இந்திய இராணுவ மற்றும் விமானப் படையினர் நேற்று முன்தினம் கூட்டுப் போர் ஒத்திகையில் ஈடுபட்டனர்.

ஒபரேசன் டிசர்ட் ஸ்ட்ரைக் என்ற பெயரில் நடந்த இந்த ஒத்திகையில் இந்திய இராணுவத்திற்கு ரஷ்யாவில் இருந்து புதிதாக வாங்கப்பட்டுள்ள டி-90 ரக டாங்கிகள், கண்காணிப்பு கருவிகள், உள்ளிட்ட நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. விமானப்படையின் மிராஜ்-2000, மிக்-27, மிக்-21, ஜாக்குவார் மற்றும் போர் உலங்குவானூர்திகள் போன்றவை இந்த ஒத்திகையில் கலந்துகொண்டன.

ஒபரேசன் பிராஸ் அட்டாக் என்ற பெயரில் கடந்த 1987 ஆம் ஆண்டு இராணுவமும் விமானப்படையும் நடத்திய போர் ஒத்திகை தார் பாலைவனத்தில் நடந்தது. அதன்பின் தற்போதுதான் இந்தப் பகுதியில் ஒத்திகை நடந்துள்ளது. இதேபோன்று. இந்தியப் போர் ஒத்திகையில் சீன அதிகாரிகள் கலந்து கொள்வதும் இதுவே முதல் முறை. இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இராணுவத் தளபதி ஜெனரல் ஜே.ஜே.சிங், விமானப்படை உதவி தளபதி அஜித் பவானி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



புதுடில்லியில் மோட்டரோலா எல்-6 வகை கைத் தொலைபேசியை அந்நிறுவனத்தின் துணைத்தலைவர் அறிமுகப்படுத்தினார்.

## அத்வானியுடன் ஆர்.எஸ்.எஸ். தலைவர் சந்திப்பு

(புதுடில்லி)

பா.ஜ. புதிய தலைவர் நியமனம் தொடர்பாக கட்சியின் முக்கிய தலைவர்களை ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன் சந்தித்து வருகிறார். அந்த வகையில் அத்வானியையும் சுதர்சன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

சென்னையில் பா.ஜ தேசிய செயற்குழுக் கூட்டம் நடந்தபோது டிசெம்பர் மாத இறுதியில் தலைவர் பதவியில் இருந்து விலகப் போவதாக பா.ஜ. தலைவர் அத்வானி அறிவித்தார். வரும் டிசெம்பர் மாதம் மும்பையில் நடக்கும் பா.ஜ செயற்குழுக் கூட்டத்தில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அத்வானி தெரிவித்தார். மேலும் பா.ஜ. கட்சி விவகாரங்களில் ஆர்.எஸ்.எஸ் தலையிடுகிறது. ரிமோட் கொன்ட்ரோல் போல் செயற்படுகிறது என்றும் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து பா.ஜ.வின் புதிய தலைவர் நியமனம் தொடர்பாக கட்சியின் முக்கிய தலைவர்களை ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சன் சில நாட்களாக சந்தித்து ஆலோசனை செய்து வருகிறார். முன்னாள் பிரதமர் வாஜ்பாயையும் சந்தித்துப் பேசினார். டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜ தலைவர் அத்வானியை சுதர்சன் சந்தித்தார். இருவரும் ஒன்றரை மணி நேரம் ஆலோசனை செய்தனர். புதிய தலைவர் நியமனம் பா.ஜ.வின் அன்றாடப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். தலையீடு எந்த வகையில் இருக்க வேண்டும் ஆகியவை குறித்து இருவரும் பேசியதாக தகவல்கள் வெளியாகின.

## அரசியல் தொடர்பை அறுத்து விட்டேன் என்கிறார் ஜெயாஜெட்லி

(புதுடில்லி)

அரசியலில் எனக்கு இருந்த அனைத்து தொடர்புகளையும் அறுத்து விட்டேன். இப்போது நான் ஒரு சாதாரண சமூக சேவகி மட்டுமே என சமதா கட்சியின் முன்னாள் தலைவர் ஜெயாஜெட்லி தெரிவித்தார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடந்த சுதேசிஜார்கன்மன்ஞ் பேரணியில் ஐக்கிய ஜனதாதளத்தில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கலந்து கொண்டு பேசினார். அந்தக் கூட்டத்தில் பேசிய சமதா கட்சியின் முன்னாள் தலைவர் ஜெயாஜெட்லி கூறியதாவது நான் அரசியலில் வைத்திருந்த அனைத்து தொடர்புகளையும் ஏற்கனவே அறுத்துவிட்டேன். தற்போது நான் என்னுடைய தொண்டு நிறுவனமான தஸ்த்காரி ஹாத் சமிதியில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். இதை நான் உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சமுதாய நலனுக்குபாடுபடும் ஒரு சாதாரண சமூக சேவகி நான். அரசியலில் இருந்த அனைத்து உறவுகளையும் துறந்து இரண்டு ஆண்டுகளாகின்றன. இவ்வாறு முதன் முதலாக தன்னுடைய அரசியல் துறவறத்தை ஜெயாஜெட்லி ஒப்புக்கொண்டார்.

## சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் வழக்குப்பதிவு செய்தது. சி.பி.ஐ

டில்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவரம் தொடர்பாக இரண்டு வழக்குகளை சி.பி.ஐ. பதிவு செய்துள்ளது. 1984 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். இதையடுத்து டில்லியில் சீக்கியர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.இந்த கலவரத்தில் ஏராளமான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடமைகளும் சூறையாடப்பட்டன. இந்தக் கலவரம் குறித்து விசாரித்த நானாவதி ஆணைக்குழு மத்திய அமைச்சரான ஜெகதீஷ் டைட்லர் உட்பட சிலர் மீது குற்றம் சுமத்தியது. தற்போது இந்தக்கலவரம் தொடர்பாக இரண்டு வழக்குகளை சி.பி.ஐ. நேற்று முன்தினம் பதிவு செய்தது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் வேண்டுதலின்படி இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பிரபல கேலிச் சித்திர ஓவியர் ஆர்கே. லட்சுமணன் வரைந்த கேலிச்சித்திரங்கள் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் கண் காட்சியாக வைக்கப் பட்டுள்ளது. ஜனாதிபதி அப்துல் கலாம் இந்த கண்காட்சியை திறந்து வைத்து தன்னை சித்தரிக்கும் வகையில் வரையப்பட்ட சித்திரத்தை பார்க்கிறார்.

# மெக்ராத் - பிரெட்லீ அபாரம்
# தோல்வியின் விளிம்பில் மே.தீவு



அவுஸ்திரேலியாவின் கோபாட்டில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் மேற்கிந்திய தீவு மோசமான நிலையில் உள்ளது.

முதலாவது இனிங்சில் 149 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்த மேற்கிந்திய தீவு அணி இரண்டாவது இனிங்சில் 82 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி வருகிறது.

ஒரு விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் என்ற நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய அவுஸ். 406 ஓட்டங் களை குவித்தது.

ஹெய்டன் 110, குசே 137, கொக் 60 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் எட்வட்ஸ் மூன்று விக்கெட்டுக்களையும், கொலிமோர், பிரவோ தலா இரண்டுவிக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்சிற்காக ஆடும் மேற்கிந்திய தீவு சந்தர்போல், சர்வான், ஹைஸ்ஸ், சிமித் ஆகியோரின் விக்கெட்டை இழந்துள்ளது. அதிபட்சமாக சர்வான் 32 ஓட்டங்களைப் பெற்றார்.

மெக்ராத் இரண்டு விக்கெட்டுக்களையும், பிரெட்லீ இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க தம்புள்ளையில் வேகப்பந்து பயிற்சி முகாம்

சிறிலங்காவுக்கான ஆசிய கிரிக்கெட் அக்கடமி (**Asian Cricket Academy**) கீறோ கொண்டா (**Hero Hinda**) நிறுவனத்துடன் இணைந்து வேகப்பந்துவீச்சாளர் பயிற்சி முகாம் ஒன்றினை பாடசாலை மாணவர்களிடையே நடத்துவதற்கு முன்வந்துள்ளது. இந்தப் பயிற்சி முகாம் தம்புள்ளயில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும். இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவிரும்பும் 15 தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் தமது பெயர்களை கிரிக்கெட் பயிற்றுநர்கள் ஊடாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இலங்கையில் வேகப்பந்து வீச்சாளர்கள் குறைவாக இருப் பதால் இளம்வீரர்கள் மத்தியில் வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்குவ தற்காகவே இப்பயிற்சி முகாம் ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் தெரிவு செய்யப்படும் வீரர்கள் ஒரு வருடம் வேகப்பந்துப் பயிற்சிக்கான புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்வர் என ஒழுங் கமைப்பாளர் சிறீஸ்கந்த குமார் தெரிவிக்கிறார்.

## உடல் நிலையை திருப்திப்படுத்திக்கொண்டு இரண்டாவது டெஸ்டில் களமிறங்குகிறார் வோன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோன் தனது உடல் நிலையை திருப்திப்படுத்திக்கொண்டு இன்று நடைபெறும் பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். வோகன் பங்குபற்றாத முதல் டெஸ்ட் தோல்வியில் முடிவடைந்ததை யடுத்து அடுத்த போட்டியை வெல்ல வேண்டும் என்ற துணிவுடன் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியான முழங்கால் காயம் காரணமாக அவர் முதலாவது போட்டியில் பங்கெடுக்க வில்லை. இவருக்குப் பதிலாக இயன்பெல் அணியில் இணைக்கப்பட்டார். ஆயினும் வோகன் அணிக்குத் திரும்புவாராயின் கொலிங்வூட் அதற்கு இடமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சிலாவத்தை சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப் பட்டு தற்காலிக குடியிருப்பில் வாழும் சிறார் களின் .மனநிலையினை மேம்படுத்தும். நோக்குடன் சிலாவத்தை கிராம சிறுவர் களுக்கான விளையாட்டு விழா கடந்த 15 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு சிலாவத்தை மைதானத்தில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுத வியில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத் தால் நடாத்தப்படும் இந்த விளையாட்டுப் போட்டி சிலாவத்தை இளம்பறவைகள் விளை யாட்டுக் கழகத்தலைவர் டன் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் பயிற்சியினை முகுந்தன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்திட்ட இணைப்பாளர் ரங்கன், தேவன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இதில் மைதானப் போட்டிகள் உதைபந்தாட்டம், கிளித்தட்டு, கபடி என ஆண், பெண்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் அனைவரும் ஆர்வத் துடன் கலந்து கொண்டனர். (20)

## பந்து வீச அதிக நேரம் எடுத்தனர் பாக். வீரர்கள் அனைவருக்கும் அபராதம்



மூல்டானில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி யில் பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத் துக் கொண்டதற்காக பாகிஸ்தான் வீரர்கள் அனைவருக்கும் சாவதேச கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது. மூல்டானில் புதன் கிழமை முடிவுற்ற முதல் டெஸ்ட் போட்டி யில் இங்கிலாந்தை 22 ஓட்டங்களில் தோற்கடித்தது பாகிஸ்தான். அப் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓவர்களில் இரண்டு ஓவர்கள் குறைவாக வீசப்பட்டதற்காக அணி வீரர்கள் அனைவரும் ஆட்டத்துக்கான சம்பளத்தில் 10 சதவீதத் தொகையை அபராதமாக செலுத்த வேண்டும் என ஐ.சி.சி கூறியுள்ளது. அணித்தலைவர் என்ற விதத்தில் இன்சமாம் உல் ஹக்குக்கு 20 சதவீதம் அபராதம் விதித்துள்ளது ஐ.சி.சி.





யப்பானிலுள்ள நகோயா நகரில் உலக கிராண்ட் சம்பியன் கோப்பைக்கான மகளிர் கைப்பந்துப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது.அதில் தென்கொரிய அணியை சீன அணி வென்றது. தனது அணி வீராங் கனைகளுக்கு கைகுலுக்கி பாராட்டுத் தெரிவிக்கிறார் அணித்தலைவி பென்–குன்.

## சர்வதேச ஹொக்கி போட்டி அவுஸ்திரேலியா புதியசாதனை

சர்வதேச ஹொக்கிப் போட்டியில் அதிக கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சாதனையை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது.

பிஜியில் உள்ள சுவாவில் வியாழக்கிழமை நடைபெற்ற உலகக் கோப்பை தகுதிப் போட்டியில் பிஜி அணியை 26-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது அவுஸ்திரேலியா. இது புதிய சாதனை இதற்கு முன்பு 2003 இல் நடைபெற்ற தென் அமெரிக்க சம்பியன் போட்டியில் பராகுவே அணியை 25-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜன்டீனா தோற்கடித்ததே சாதனையாக இருந்து. அதை தற்போது அவுஸ்திரேலியா முறியடித்துள்ளது.

## இங்கிலாந்து செல்வது ஒத்திவைப்பு இரண்டாவது போட்டியிலும் ரெஸ்கொதிக்



பாகிஸ் தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் ரெஸ்கொதிக் விளையா டுவார் என இங்கிலாந்து அணி நிர்வாகம் தெரிவித் துள்ளது.

அந்த அணியின் துணைத் தலைவராக இருப்பவர் மார்கஸ்ரெஸ்கொதிக் அவரது மாமனார் கடந்த வாரம் இங்கிலாந்தில் நடைபெற்ற விபத்தில் காயமடைந்தார். இதை அறிந்த ரெஸ்கொதிக் அவரைப் பார்க்கச் செல்வதால் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாட மாட்டேன் என அறிவித்திருந்தார்.

ஆனால் அணி நிர்வாகம் கேட்டுக் கொண்ட தன் பேரில் இன்று பைசலா பாத்தில் தொடங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரெஸ்கொதிக் விளையாடுவார் என வெள்ளிக்கிழமை அறி விக்கப்பட்டுள்ளது.



## இரண்டாவது ஒரு நாள் போட்டி
# இந்திய அணிக்கு 6 விக்கெட் வெற்றி தொடர் வெற்றிக்கும் முற்றுப்புள்ளி





பெங்களூரில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இவ் வெற்றி மூலம் தென்னாபிரிக்காவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் அவுஸ்திரேலியாவின் தொடர்ச்சியான 21 ஒரு நாள் போட்டி என்ற சாதனையும் தப்பிப்பிழைத்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி தென்னாபிரிக்காவை முதலில் துடுப்பாடப் பணித்தது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

கோல் 32, பிறின்ஸ் 30, பொலக் 29, கைம் 28 ஓட்டங்களை அதிகபட்சமாகப்பெற்றனர்.





பந்து வீச்சில் பதான் மூன்று விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங், சேவாக் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்தியா 35.4 ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சேவாக் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும், பதான் 37 ஓட்டங்களையும், காம்பீர் 38 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பொலக், ஒன்ரொங் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பதான் தெரிவானார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இப்போட்டித் தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளன.

## சிந்தனைக்கு



சுதந்திரம் தான் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது, முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அவநம்பிக்கையின் வெளிப்பாடு!

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சனாதிபதிக்கான தேர்தலைத் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் புறக் கணித்தனர். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகக் குறைந்தளவு வாக்குகள் தமிழர் தாயகப் பகுதியில் பதிவாகின. எடுத்துக்காட்டாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஒரு சதவீதத்திற்கு கீழ்ப்பட்ட வாக்காளர்களே வாக்களித்தனர். அதிலும் விசேட அம்சமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒரு வாக்காளர் மட்டுமே வாக்களித்திருந்தார். இப் புறக்கணிப்பானது தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர் மீதும் தமிழ் மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

தமிழ் மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்காமை குறித்து "கவலை"கொள்ளும் சிலர் இரண்டுவிதக்கருத்துக்களை, அபிப்பிராயங்களை முன்வைக்கின்றனர். இதில் ஒன்று சனநாயக உரிமைகளைக் குறைத்து மதிப்பிடச் செய்துள்ளது என்பது, மற்றையது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான சக்திகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதாகும்.

ஆனால் இவை இரண்டும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல. ஏனெனில் சனநாயக உரிமை என்பது தேர்தலில் வாக்களிப்பது என்ற அர்த்தத்தில் மட்டும் பார்க்கப்படுவது பொருத்தமானதாக இருக்கமாட்டாது. அவ்வாக்குரிமையைப் பயன்படுத்தல் என்பது எமது உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.ஏனெனில் இது ஒருவரை ஆட்சி அதிகாரத்திற்காகத் தெரிவுசெய்வதற்காக வழங்கப்படும் உரிமையாகும். ஆகையினால் சிறிலங்கா தேர்தல்களத்தில் உள்ளவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பார்கள், அவர்களின் தேவைகளை நிறைவு செய்வார்கள் எனத்தமிழ் மக்கள் கருதும் பட்சத்திலேயே சிறிலங்காவில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்குகளை அளிக்க முடியும். இதனைவிடுத்து வாக்குரிமை உண்டு என்பதற்காக அதனைப்பயன்படுத்தியே ஆக வேண்டும் எனக் கூறுவது பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது.

அதாவது, தமிழ் மக்கள் தாம் ஏற்றுக் கொள்ளாத தலைமைக்கும் தமக்கு நம்பிக்கை அளிக்க முடியாதவர்களுக்கும் தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானதாகும். இது ஒரு வகையில் வாக்குரிமைகளைத் தவறான வழியில் பயன்படுத்தத் தூண்டும் செயலுமாகும்.

அடுத்ததாக, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் சக்திகளுக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கத் தவறிவிட்டனர் என்பது. ஆனால் இது தவறான அர்த்தத்திலானதாகும். ஏனெனில் தமிழ் மக்கள் சமாதானத்திற்காகவும் அரசியல் தீர்விற்காகவும் பல தடவை வாக்களித்துவிட்டனர். ஆனால் சிங்கள ஆட்சித் தலைவர்கள் எவருமே அதற்குரிய மதிப்பை அளிக்கவில்லை.

அத்தோடு தமிழ் மக்கள் சமாதானத்தின் பேரில் வாக்களித்தால் மட்டும் இங்கு சமாதானம் எதுவும் ஏற்பட்டுவிடமாட்டாது. சமாதானம் பற்றிய முடிவும்சரி, யுத்தம் பற்றிய முடிவும் சரி எடுக்கவேண்டியவர்களாக சிங்கள அரசியல் தலைவர்களும் மக்களுமே உள்ளனர்.

இதேவேளை தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்தமையானது சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கையாகவோ, யுத்தம் ஒன்றை விரும்புவதாகவோ அர்த்தம் கொள்ளுதலும் முடியாது. சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பான முடிவொன்றிற்கு வருவதற்கு தமிழ் மக்கள் சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர் என்றே கூறுதல் வேண்டும்.

ஆகையினால் யுத்தமா? சமாதானமா? என்பதை தற்போது தீர்மானிக்கவேண்டியவர்களாக சிங்களத் தலைவர்களே உள்ளனர். இதில் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களின் தெரிவிற்கான சந்தர்ப்பத்தை தற்பொழுது வழங்கியுள்ளனர் என்பதே சரியானதாகும்.

ஆனால் ஒன்று, புதிய ஆட்சியாளர்கள் முன்னோக்கியதான சமாதான முயற்சிகளை பின்னோக்கி இழுத்துச்செல்லத் தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. யுத்தநிறுத்தம் சமாதான முயற்சிகள் என்பன விட்ட இடத்தில் இருந்தே தொடங்கப்பட வேண்டும்.

1994 ஆம் ஆண்டில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியானதன் பின்னர் பிரதிப் பாதுகாப்பமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்த அவர்கள்முன்னைய ஐ.தே.க ஆட்சிக் கால இராணுவ தந்திரோபாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனக் கூறினார். முன்னைய இராணுவத் தந்திரோபாயம் வண்டில்களின் பின்னால் மாடுகளைக் கட்டியது போன்றதாகும் என்றார். ஆனால் அவர் மாற்றியமைத்த தந்திரோபாயம் பின்னர் சந்தித்த நெருக்கடிகள் உலகமறிந்ததொன்று.

அதேபோன்றே தற்பொழுதும் முன்னோக்கியதான சமாதான முயற்சிகள் யுத்தநிறுத்தம் என்பனவற்றை மாற்றியமைக்க வண்டிலின் முன்னால் மாடுகளைக் கட்டுதல் போன்ற கதைகளை விடுதல் சமாதான முயற்சிகளுக்கு உதவாது என்பதை புதிய சனாதிபதி புரிந்து கொள்ளுதல் வேண்டும். இதனைக் கருத்தில் கொள்ளாது போனால் அ[illegible]ான விலைகளையும் அவரே கொடுக்க வேண்டியிருக்கும்.



சுதந்திரக் கட்சியின் இன்றைய அரசியல் நிலை....

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தாலே வீழ்ச்சி கண்ட பங்குச்சந்தை மீட்சி பெறும்

### - பொருளாதாரத்துறை பேராசிரியர் சின்னத்தம்பி

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம்பித்து பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை முன் வைத்தாலே வீழ்ச்சி கண்டுள்ள கொழும்பு பங்குச்சந்தை மீட்சி பெறும் என்று பேரதனை பல்கலைக்கழக பொரளாதாரத்துறை பேராசிரியர் சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:,

சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார் என்ற எதிர்பார்ப்பில் கொழும்பு பங்குச்சந்தை உயர்வாக காணப்பட்டது.ஆனால் சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவானதும் கொழும்புப் பங்குச் சந்தை பாரிய அளவில் மோசமான வீழ்ச்சி கண்டது.

புதிய சனாதிபதி தனது பொருளாதாரக்கொள்கைகளை முன் வைக்க வேண்டும்.என்ன கொள்கைகளை முன்வைக்கப் போகிறார் என்பது தொடர்பாக திட்ட வட்டமாக கூறும்போது அவரது கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் பங்குச்சந்தையில் வீழ்ச்சி யற்ற தன்மை ஏற்படும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து பொருளாதார வளர்ச்சிக் குரிய கொள்ளைகள் முன்வைக்கப் பட்டாலே உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்மக்களின் ஒற்றுமையையும் பலத்தையும் தேர்தலில் மீண்டும் உணர்த்தியுள்ளோம்

### - யாழ். உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 17ஆம் திகதி நடந்த தேர்தல்மூலம் தமிழ்மக்களின் ஒற்றுமையும் பலத்தினையும் மீண்டும் சிறிலங்கா பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்தியுள்ளோம். தென்னிலங்கை அரசியல்வாதிகள் இன்று அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில் நிச்சயமாக சர்வதேசமும் எமது மக்கள் சிங்களத் தலைமையையோ அல்லது தென்னிலங்கை அரசியலையோ இனியும் நம்பி ஏமாறத் தயாரில்லை என்பதையும் புரிந்து கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.என யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் தெரிவித்துள்ளது.

அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதிய சனாதிபதியோ, அல்லது சிங்களப் பேரினவாதிகளோ தமிழ் மக்களாகிய எமது தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமை என்பவற்றை ஏற்றுக் கொள்ள மறுக்குமாக இருந்தால் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் எமது உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக வேறு வழியின்றி மீண்டும் எமது உரிமைக்கான போரைத் தொடங்குவதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கின்றோம் என்பதை புதிதாகப் பதவி ஏற்றுள்ள சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இனிவரும் காலங்களிலும் எமது விடுதலைக்கான காலத்தை நீட்டிச் செல்ல நாம் தயாரில்லை, நாகரீகமான, கௌரமான மனித வாழ்வையே நாம் விரும்புகின்றோம்.தொடர்ந்தும் எமது மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பினுள் வாழ்வதற்குத் தயாரில்லை. அவ்வாறு இராணுவப்பாதுகாப்பு எமது இனத்தைக் காட்டிக் கொடுத்து இன மானத்தை விற்று அரசியல் நடாத்தும் தேசத்துரோகிகளுக்கேதேவைப்படுமென எண்ணுகின்றோம்.தேசத் துரோகிகள் மீது சிங்கள பௌத்த பேரினவாதம் கரிசனை கொண்டிருந்தால் அவர்களையும் பாதுகாப்பாக தென்னிலங்கைக்கு அழைத்துச்செல்லட்டும்.

நாம் புதிய சனாதிபதிக்கு சொல்ல விரும்புவது எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்பு படையை உடனடியாக இங்கிருந்து அகற்றி எமது மக்களின் இயல்பு வாழ்விற்கு வழிவிட வேண்டும். மாறாக எமது மண்ணைத் தொடர்ந்தும் ஆக்கிரமித்து இராணுவம் இருக்குமானால் விளைவுகள் விபரீதமானவையாகவே இருக்கும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும்

### - பவ்ரல் அமைப்பின் தலைவர்

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸிலி ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக் கருத்து தெரிவிக்கப்பட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டிலுள்ள சட்ட திட்டங்களின்படி தேர்தல் ஆணையாளர் சில தீர்மானங்களை பல்வேறு விதங்களில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மீண்டுமொருமுறை தேர்தலை நடத்துவதுஅல்லது ஒரு தொகுதியில் தேர்தலை நடத்துவது என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் அது குறித்து சட்டதிட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் சில விடயங்களை மீண்டும் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டும் என நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவின் சிந்தனைகளடங்கிய வரவு -செலவுத்திட்டம் விரைவில்!

## -சு. க. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

புதிய சனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் அரச நிர்வாகத்தின் கீழ் மகிந்தவின் சிந்தனைகள் அடங்கிய முதலாவது வரவு செலவுத் திட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த கருத்தை வெளியிட்ட அவர், இத னால் தேர்தலுக்கு முன்னர் சமர்ப்பிக் கப்பட்ட வரவு-செலவுத் திட்ட யோசனை இரத்துச் செய்யப்படுமென தெரிவித்தார்.

இதற்கு அமைய மகிந்தவின் நோக்கு மற்றும் தேர்தல் பிரச்சாரத்தின் போது மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகள் என்பன வற்றை அடிப்படையாக கொண்டு புதிய வரவு-செலவுத்திட்ட யோ சனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும்.

# சிறிலங்காவின் அமைச்சரவை நேற்று கலைக்கப்பட்டது

(கொழும்பு)

சிறிலங்காவின் சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றதை யடுத்து அமைச்சரவை நேற்றுக் கலைக்கப்பட்டது.

சனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் தனது பிரதமர் பதவியி லிருந்து மகிந்தராஜபக்ஷ விலகினார்.

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷவிலகியதையடுத்து அவரது ஒட்டுமொத்த அமைச்சரவையும் கலைக்கப்பட்டுவிட்டது. விரைவில் புதிய அமைச்சரவை அமைக்கப்படும் என்றும் புதியவரவுசெலவுத்திட்டமும் தாக்கல் செய்யப்படும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

## புதன் சனாதிபதிப் பதவி உத்தியோகபூர்வ கையளிப்பு

(கொழும்பு)

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வமாக தமது பதவியை புதிய சனாதி பதிக்குக் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் புதன்கிழமை இடம் பெறவுள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அன்றைய நிகழ்வின் பொழுது முன்னாள் சனாதிபதி, தமது சனா திபதிக் காலத்தில் மேற்கொண்ட கடமைகள் குறித்த விபரமான அறிக்கை ஒன்றைபுதியசனாதி பதிக்குக் கையளிப்பார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

### ரணிலுடன்...

செயற்பாடுகள் கொழும்பு அரசி யல் வட்டாரத்தில் பல்வேறு ஊகங் களை எழுப்பியிருக்கிறது. மகிந்த, ரணில் தரப்பினரை இணைத்து அமைதி முயற்சிகளை முன் னெடுக்கும் பணிகளில் இந்தியத் தலையீடு தொடங்கியிருக்கிறதா என்ற கேள்விகளை இந்தியத் தூதரக வட்டாரங்கள் மறுக்கின்றன. இந்தக் கேள்விக்கான பதில்களை இப்போது அளிக்க இயலாது. இப்போதுதான் மகிந்தராஜபக்ஷ பதவியேற்றுள்ளார் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.ஒருமித்த கருத்தை உருவாக்குவதன் மூலமே பிரச்சி னைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பதில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நம்பிக்கை கொண்டவர் என்றும் தூதரக வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

### பிரபாகரனின்...

வேண்டிய பெரும்பான்மையான தமிழ் வாக்காளர்கள் வாக்களிக் காமல் தடுக்கப்பட்டு விட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழர்கள் வாக்களித்திருந்தால் ஆகக்குறைந்த பட்சம் ஐந்து இலட்சம் வாக்குகளையாவது நாம் பெற்றிருப்போம்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவரின் எண்ண ஓட்டங்கள் குறித்த எமது அனுபவம் தோல்வி யடைந்துவிட்டது. தென்னிலங் கையில் ஒரு கடும் போக்காளர் வரு வதன் மூலம் யுத்தத்தை மீளவும் தொடர தமிழீழ விடுதலைப் புலிகள் எண்ணுகின்றனர்.

சர்வதேச வலைப்பின்னலுடன் கூடிய அமைதிமுயற்சிகளிலிருந்து வெளியேற வேண்டியதேவை விடு தலைப் புலிகளுக்கு உள்ளது. இதற்காக மகிந்த ராஜபக்ஷவினது வெற்றி அவர்களுக்குத் தேவைப் படுகிறது என்றார் ராஜித சேனாரத்ன.

### மகிந்த...

மக்கள் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஏழரை இலட்சம் தமிழ் வாக்காளர்கள் உள்ள யாழ்ப்பாணத்தில் சில ஆயிரம் வாக்காளர்கள்தான் வாக் களித்திருக்கிறார்கள் என்றார் வைகோ.

# கிளிநொச்சி நகரப்பகுதிக்கு 24 மணிநேர மின் விநியோகம்

கிளி.நகரிலும், அண்டிய பகுதிகளிலும் மின்சார விநியோகம் தற்போது இரவு 12.00மணி தொட க்கம் அதிகாலை 4.30 மணி வரை(4.30மணித்தியாலயம்) தடைப் பட்டிருந்தது. இதனை நீக்கும் பொருட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் பரீட்சார்த்தமாக மின்சார விநியோகம் இரவுபகல் 24 மணி நேரமும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் மின்பாவனை யாளர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுமென மின்சாரசபை அறிவிப்பதோடு, மின் இயந்திரங்கள் மாற்றும் போது 5-10 நிமிடங்கள் மின்சாரம் தடைப்படும் என்பதையும் பாவனையாளர்களுக்கு மின்சாரசபை அறியத்தருகின்றது.

# மகிந்தவின் பதவியேற்பை சந்திரிகா புறக்கணித்தார்

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற நிகழ்வில் பதவி விலகும் சனாதி பதியான சந்திரிகா குமாரதுங்க பங்கேற்காமல் புறக்கணித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒட்டுமொத்த அமைச் சரவையும் இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்ற போதும் மகிந்தவின் கட்சித் தலைவரும் மகிந்த விடம் பதவியை ஒப்படைப் பவருமான சந்திரிகா குமாரதுங்கவும் அவரது சகோதரர் அநுரா பண்டார நாயக்கவும் நிகழ்சியைப் புறக்கணித் துள்ளனர்.

முன்னதாக சந்திரிகா குமாரதுங்கவும்இந்த நிகழ்சியில் பங்கேற்பார் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் அவர் புறக்கணிப்புச் செய்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் மூத்த தலைவரும் பாராளுமன்ற சபாநாயகருமான டபிள்யு. ஜே.எம். லொக்கு பண்டார இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

# பிரதமர் பதவி யாருக்கு? ஆட்சிபீடத்தில் குழப்பம்

பிரதம மந்திரியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ தற்போது சிறிலங்காவின் சனாதிபதியாகப் பதவியேற்றுள் ளதைத் தொடர்ந்து ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களின் உயர் மட்டத்தினர் இடையில் பிரதமர் பதவி தொடர்பாக பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ள தாகத் தெரியவருகின்றது.

· ஆரம்பத்திலேயே அடுத்த பிரதம மந்திரி அநுராவே எனத் தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவரை அப்புறப்படுத்தும் நடவடிக் கைகள் தான் கட்சிக்குள்ளேயே நிலவுவதாக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.தற்போது பிரதமர் பதவிக்கான போட்டிகளில் டி.எம். ஜெயரட்ண, மங்களசமரவீரரட்ண சிறி விக்கிரம நாயக்கமைத்திரிபாலசிரி சேனா உட்பட மேலும்சிலர் ஈடு பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

### யாழ்...

கீழ் உள்ளது என்கிற உண்மையை இந்தத் தேர்தல் புகட்டியுள்ளது.

தமிழ் ஆயுதக்குழுவொன்றின் ஆதரவு தமக்கு இருப்பதாக கருதிய அரசியல்வாதி கூட, யாழ் மாவட்டத்தின் மொத்த வாக்குகளில் பதிவானவற்றில் கணிசமான அளவைக் கூட பெறமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

இதன் மூலம் அந்த ஆயுதக் குழுவிற்கு மக்களிடம் எதுவித ஆதரவும் இல்லை என்ற உண்மை அம்பலமாகியுள்ளது.ஏனெனில் அவருக்கு கிடைத்த மிகச் சொற்ப வாக்கு களில் அரச ஊழியர்களினதும் மற்றும் தபால் மூலமும் பிற பகுதிகளிலிருந்தும் அளிக் கப்பட்ட வாக்குகளும் அடங்கும். சில வாக்கு களைக் கூடயாழ்.மாவட்டத்தில் ஒட்டு மொத்தமாக பெற முடியாத ஒரு ஆயுதக் குழுவையே எமது அரசியல் தலைவர் நம்பி யிருக்கிறார்.

இப்படியான தமிழ்.ஆயுதக் குழுவின் தலை வரை அமைச்சராக வைத்துக்கொண்டு வடபகுதியை தம்மால் ஆளமுடியும் என காட்டும் அரசியல்வாதிகள் இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்துக் கற்றுக்கொள்ளவேண்டிய மிகவும் அபாயகரமான செய்தியொன்று உள்ளது.அது என்னவெனில், படைகளின் கட்டுப் பாட்டின் கீழ் யாழ்.குடாநாடு இருப்பதாக நாம் எண்ணிக்கொண்டிருக்கும் இந்நேரத் திலேயே அது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ்உள்ளதுஎன்பது உண்மையே ஆகும். இந்நிலையில் அங்குள்ள எமது படை களை முற்றுகையிட்டு விடுதலைப்புலிகள் தாக்குவார்களாயின் நிலைமை என்ன வாகும் என்பது அந்த அபாயமாகும்.இந்த உண்மையை உணராமல் தமிழ் ஆயுதக்குழுவை அர வணைத்துக் கொண்டு கற்பனையில் மிதக்கும் அரசியல்வாதிகள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நளின் சேனநாயக்க கூறியுள்ளார்.

### சனாதிபதியாக...

விலகிக் கொண்டனர். அதன் பின்னர் இருதரப் பினரும் யுத்தநிறுத்த மீறல் தொடர்பாக தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர்.

தாம் சனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டால் அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங் குவதாகவும் அமைதியைக் கொண்டு வருவதாகவும் சந்திரிகா குமாரதுங்கவின் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு கொண்டு வருவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஆனால் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் எவரையும் ஆதரிக்கப் போவதில்லை என்று நவம்பர் 10 ஆம் நாளன்று விடுதலைப் புலி களின் நிலைப்பாடு வெளியானதில் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்குப்பாதிப்பு ஏற்பட்டது.

எதிர்வரும் நவம்பர் 27 ஆம் நாளன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமது மாவீரர் நாள் உரையில் விடுதலைப் புலிகளின் எதிர்காலச் செயற்பாடுளை அறிவிப்பார்.

விமானப்படை உள்ளிட்ட இராணுவக் கட் டமைப்பை வலுப்படுத்தியிருக்கும் பிரபாகரன், சிறிலங்காவின் புதிய சனாதிபதிக்குச் சொல்லப் போகிற செய்தி மிகவும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டுக்குள் தீர்வா அல்லது கூட்டாட்சி முறையிலான தீர்வா அல்லது வேறு ஒரு கோரிக்கையா என்று பிரபாகரன் அந்த உரையில் தெரிவிக்கக் கூடும் என்று சி.என்.என். செய்திக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

### யுத்தநிறுத்த...

செய்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அதற்கு தொடர்புடையவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும்.கொலை, கடத்தல், ஆட்சேர்ப்பு இவற்றைத் தடுக்கும் வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒருவருடத்திற்கு முன்னர் ஏற்பட்ட பேரழிவான ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ் க்கை மீண்டும் கட்டியெழுப்பப்படும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எனதுநேரடிக் கண்காணிப்பின் கீழ் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். உலக அரங் கில் நம்நாட்டுப் பொருளாதாரம் உயரிய நிலைக்குக் கொண்டு செல்லப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள வர வேற்கப்படுவர்.

நாட்டின் பொருளாதாரத்தின் மூலமான நன்மைகள் மக்களுக்குக் கிடைக்க வகை செய்யப்படும். நாட்டின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். அதற்குஅனைவரும் கட்டுப் படுவதுடன் அதனை மதிக்கவும் வேண்டும். அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத்தை மீறக் கூடாது. பிரதமர், அமைச்சர்கள், முப் படையினர் மற்றும் அரச அதிகாரிகள் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.அரச நிறுவனங்கள் ஊழல் மோசடிகள் இன்றி பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டும். சட்ட ஒழுங்கு மற்றும் மனிதஉரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.என்னை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட எவரையும் நான் எதிரியாகக் கருத மாட்டேன்.

சமாதானத்தை ஏற்படுத்த அனைத்துக் கட்சிகளும் உதவ வேண்டும். நான் பல சவால் களுக்கு முகம்கொடுத்தே இந்தப் பதவிக்கு வந்துள்ளேன்.

எதிர்காலத்தில் மேலும்பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அவற்றிற்கு நான் தைரியமாக முகம் கொடுப்பேன்.ஆசிய நாடுகளுடன் ஒன்றி ணைந்து நாம் பணியாற்ற உள்ளோம்.

நாட்டிற்கு உகந்த வெளிநாட்டுக் கொள் கைகளை வகுக்க உள்ளோம்.

பொதுமக்கள் என்னைச் சந்திப்பதற்கு எது வித தடையும் போடப்படமாட்டாது.

முகஸ்துதி செய்பவர்களை நெருங்கிய நண்பர்கள் என்று கருதவில்லை. நியாயமாக விமர்சிப்பவர்களையே நெருங்கிய நண்பர் களாகக் கருதுகிறேன்.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது முன்வைக்கப்பட்ட கொள்கையானது இனி தேசிய கொள்கையாக்கப்பட்டு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும்.

மகிந்த சிந்தனைகளை உள்ளடக்கிய புதிய வரவு-செலவுத்திட்டம் விரைவில பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார் மகிந்த ராஜபக்ஷ.

பதினாறாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
புலிகளின் குரலுக்கு
உன் சேவை மேலோங்கி
ஒலிக்க... வாழ்த்துகிறோம்.
ஈழநாதம்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.